THE

DANCING GIRL

A NEW SOCIAL DRAMA.

IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM,
B.A., B.L.,

Author of:

" The Two Sisters," "Galava." "Manohara," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love" " Sarangadhara," " Simhalanatha," " Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," " Markandeya," " The Fair Ghost," " The Merchant of Vanipura," " The Wedding of Valli," "The Eve of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapati Part I," " The Pongal Feast" or " Sabapathy," (Part II) "A Rehearsal" or "Sabapathy," (Part III) " Blessed in a Wife," etc. in Tamil, and " Harischandra," and " Yayathi " in English.

FIRST EDITION.

Madras:

PRINTED BY DOWDEN AND CO, AT THE " PEERLESS PRESS,"
21, Sunkurama Chetty Street.

1928

All Rights reserved.

[Price per Copy As. 2.

தாசிப் பெண்

ஒரு நவீன தமிழ் நாடகம்

ராவ் பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

(இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :

"லீலாவதி சுலோசனை" "கள்வர் தலைவன்," "மனோஹரன்," "இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்," "சத்ருஜித்," "யயாதி" 'மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்," "காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே." "மகபதி," "மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்," "விரும்பிய விதமே." "சிறுத்தொண்டர்," "காலவரிஷி," "வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்," "ரத்னாவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்," "சபாபதி-முதல் பாகம்," "பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம், "ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்" "முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "புத்த அவதாரம்," "வேதாள உலகம்," "மனைவியால் மீண்டவன்," முதலியன.

முதற் பதிப்பு

சென்னை :
டௌடன் கம்பெனியாரின்
பியர்லெஸ் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1928

காபி ரைட்]

[விலை ரூ 2 —

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

MY FRIEND

C. RANGAVADIVELU

தாசிப் பெண்

நாடக பாத்திரங்கள்

சர். நாராயணசாமி ஐயர் ... ...
சுப்பிரமணிய ஐயர் ... ...
குமாரசாமி முதலியார் ... ...
அனகிரிசாமி நாயுடு ... ...
கிருஷ்ணசாமி ஐயர் ... ...
சோமசுந்தரம் பிள்ளை ... ...
வெங்கடராம ஐயர் ... ...
கோவிந்தக் கோனார் .. ...
தங்கவேலு வாத்தியார் ... ...
நந்துலால் ... ...
சுப்பிரமணியப் பிள்ளை ... ...
சுந்தரராஜ முதலியார் ... ...
நடேச ஐயர் ... ...
மீனாட்சி சுந்தரமுதலியார் ... ...
முத்துசாமிப் பிள்ளை ... ...
சௌடால் கறுப்பன் ... ...
சுடலை முத்து ... ...
சரவணப்பிள்ளை ... ...
அநந்த கிருஷ்ண ஐயர் ... ...
கல்யாணி ... ...
ருபாவதி ... ...
லேடி நாராயணசாமி ஐயர் ... ...
சுப்பம்மாள் ... ...
கிருஷ்ணவேணி ... ..

கான்ஸ்டபில்கள், ஒரு நர்ஸ், முதலியோர்.

கதை நிகழ் இடம்:—*மதுரையிலும், சென்னையிலும்.*

காலம்—1933.

Preface to the First Edition.

This is a new social drama dealing with the question of our "unfortunate sisters." In this drama I have attempted a solution of the problem which every civilized nation must take up sooner or later. I hope the solution which I sugest would commend itself at least to the educated portion of our community.

All societies, Amateur & Proffessional will kindly note, that this as well as other dramas by me, can be acted only, on payment of a small royalty which I charge, and on obtaining my previous permission to do so. Societies will kindly note that as the law stands at present a breach of copyright in a drama, is a criminal offence.

"PAMMAL LODGE"
G. T. MADRAS.
16th August 1928.

THE AUTHOR.

தாசிப்பெண்

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்— மதுரையில் கீழ்மாசி வீதியில் ஓர் வீட்டின் அறை.

காலம்—*இரவு.*

அறையின் முன்பாகத்தில், அளகிரிசாமிநாயுடு, சோமசுந்தரம் பிள்ளை, வெங்கடராமஐயர், கோவிந்தக்கோனார், தங்கவேலு வாத்தியார், நந்துலால், சுப்பிரமணியப் பிள்ளை, சுந்தரராஜ முதலியார், நடேசஐயர் *முதலியோர் உட்கார்ந்து வெற்றிலை* போட்டுக்கொண்டு *பேசிக்கொண்டிருக்கின்றனர். மிருதங்கம் பிடில்காரர் ஒருபுறம் நின்றுகொண்டிருக்கின்றனர். ஒருபுறமாக* கல்யாணி *வருகிறவர்களை உபசரித்து வரவழைத்துக் கொண்டிருக்கிறாள்.* அளகிரிசாமிநாயுடு *தவிர மற்றவர்களெல்லாம் உரக்க குலுங்க நகைக்கின்றனர்.*

மீனாக்ஷிசுந்தர முதலியார் *வருகிறார்.*

மீனா. *என்ன ஐயா, பெருநகைப்பாயிருக்கிறது? நான் வந்தேன் என்றா?*

சோம. *அதெல்லாம் ஒன்றுமில்லை முதலியார்—நம்முடைய ஆஞ்சநேயமூர்த்தி விஷயம்.*

மீனா. *(உட்கார்ந்து) அது யார் அது ஆஞ்சநேய மூர்த்தி ?*

சோம. *ஓஹோ! உங்களுக்குத் தெரியாதோ ? இவர்தான் ஆஞ்சநேயமூர்த்தி—இவர் பெயர் அளகிரிசாமிநாயுடு.*

அள. *அடியேன்—ஆஞ்சநேயமூர்த்தி.*

சோம. பார்த்தீர்களா; இவருக்கு ஆஞ்சநேய மூர்த்தி உபாசனம் எந்நேரமும்; வார்த்தைக்கு வார்த்தை ஆஞ்சநேய மூர்த்தியை ஸ்மரித்துக் கொண்டேயிருப்பார். ஆகவே இவருக்கு ஆஞ்சநேய மூர்த்தி என்று நாங்கள் எல்லாம் பெயர் வைத்தோம்.

அள. ஆமாம், ஆஞ்சநேயமூர்த்தி.

மீனு. ஆமாம், இவரைப்பற்றி சிரிப்பென்ன?

சோம. அதுவா? நீங்கள் வருவதற்கு முன்பாகக் கல்யாணியைக் காண்பித்து, இந்த அம்மா தானோ ரூபாவதி யென்று விசாரித்தார்—அதற்குத்தான் சிரித்தோம்.

அள. இல்லை ஆஞ்சநேய மூர்த்தி, இந்த விஷயங்களெல்லாம் அடியேனுக்கு நன்றாய்த் தெரியவராது ஆஞ்சநேய மூர்த்தி.

சோம. ஆமாம், ஆஞ்சநேயமூர்த்தி அவர்கள் கூடல் அழகர் கோயிலுக்குப்போய் கும்பிட்டுக்கொண்டிருக்கலாமே—இங்கே—தாசிவீட்டிலே சேவை சாதிப்பானேன் ஐயா?

அள. வேறொன்றுமில்லை—ஆஞ்சநேய மூர்த்தி—தாங்கள் தப்பாக எண்ணக் கூடாது ஆஞ்சநேய மூர்த்தி—அடியேனுக்கு சங்கீத கேளிக்கையில் கொஞ்சம் அபிலாஷையுண்டு—அதற்காக ஆஞ்சநேயமூர்த்தி—இங்கே வந்தது ஆஞ்சநேயமூர்த்தி.

மீனு. சரிதான்; என் கச்சேரி இன்னும் ஆரம்பிக்கவில்லை—என்ன கல்யாணி, எப்பொழுதும் சொன்ன மணிப்பிரகாரம் ஆரம்பித்து விடுவையே, இன்றைக் கென்ன தாமசம்?

க. வேறொன்றுமில்லை முதலியாரவாள்—புஷ்பக்காரன் இப்பொழுதுதான் ஜடை புஷ்பம் கொண்டுவந்து கொடுத்தான்—ஜடை போட்டுக் கொண்டிருக்கிறாள் குழந்தை. அதுதான் கொஞ்சம் தாமசம்.

வேங். உம்—என்ன—இன்னும் யாருக்காவது காத்துக்கொண் டிருக்கிறயா என்ன ?

க. அப்படி யொன்றுமில்லை—சுப்பிரமணிய அய்யரவாள்— இன்றைக்கு இங்கே வருவதாகச் சேதிவந்தது, அவரும் வந்த உடனே ஆரம்பித்துவிடலாம் என்று பார்க்கிறேன்.

வேங். அடடா! சரிதான் அப்படியானல் நாம் எல்லோரும் புறப்படவேண்டியது தான்.

மீனு. யார் அது? நம்முடைய வடக்குப்பட்டி ஜமீன் வாங்கி ருரே, அவரா ?

வேங். ஆமாமாம்.

மீனு அவர் இநத வியவஹாரம் எல்லாம் வைத்துக்கொண்டி ருக்கிருரோ ?

வேங். நன்ருகக்கேட்டீர்கள் ! அவரை உங்களுக்கு எத்தனை நாளாகத்தெரியும் ?

மீனு. ஒரு வாரமாகத்தான் பரிசயம்.

வெங். இன்னும் நன்ருகத்தெரிந்த பிறகு—அவரிடம் ஒரு புஸ் தகம் ஒன்று வைத்துக்கொண்டிருக்கிருர், அதன் பெயர் —"தெருவிளையாடற் புராணம்" என்று அவரே பெயர் வைத்திருக்கிருர், அதைக் கொஞ்சம் காண்பிக்கச் சொல் லுங்கள்; அப்பொழுது அவர் சமாசாரம் உமக்கு நன் ருய்த் தெரியும்—நான் கடைசி முறை பார்த்த பொழுது அறுபத்துமூன்று திருவிளையாடல்—உம்—தெரு விளை யாடல்—எழுதிவைத்திருந்தார்.

கோவி. ஆகவே இன்றைக்கு அறுபத்து நான்காவது ஆடல் ஆரம்பிக்க எண்ணம் கொண்டிருக்கிருர் போலும்—மது ரையின் மஹாத்மியம் ! சோமசுந்தரக் கடவுள் அறு பத்து நான்கு திருவிளையாடல் ஆடினரோ இல்லையோ, அதற்குக் குறைந்திருக்கலாமா இவர் கணக்கு ?

மீனு. ஐயோ ! பாவம் இந்த இளவயதிலே—

வேங். என்ன இளவயசு, வயசு முப்பத்தெட்டாகிறது, இன்னும் இளவயசென்ன ?

மீனு. கலியாணமாயிருக்கிறதோ ?

வேங். அவருக் கென்னத்திற்கு கலியாணம் ? "ஹே விருஷப ராஜா எதேச்சம் விஹார" என்றிருப்பவர்க்கு இந்தக் கட்டென்னத்திற் கொன்று? பாவம்! அவர் அம்மான்—சூபரின்டெண்ட் ஆப் போலீஸ் அநந்தகிருஷ்ணய்யர், கிளியைப்போல ஒரு பெண்ணை வைத்துக்கொண்டிருக்கிறார்.—எவ்வளவோ சொல்லிப் பார்த்தார், நேராகவும்—சிநேகிதர் பந்துக்கள் மூலமாயும்—கட்டிக்கொள்ளடா அப்பா என்று—அது ருசிகண்ட பூனை!—

சுப்பிரமணியஐயர் வருகிறார்.

அள. வாரும், ஐயர் அவாள், ஆஞ்சநேயமூர்த்தி.

[எல்லோரும் நிசப்தமாயிருக்கின்றனர்.]

க. வாருங்கள் ஐயரவாள், உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறோம்.

மற்றவர். வாங்க வாங்க ஐயரவாள்.

[எல்லோரும் நமஸ்கரிக்க தானும் அவர்களுக்கு நமஸ்கரித்துவிட்டு சுப்பிரமணிய ஐயர் உட்காருகிறார்.]

சுப். ஏன், இன்னும் கச்சேரி ஆரம்பிக்கவில்லையோ ?

க. இல்லை, தாங்கள் வரவில்லையே என்று—

சுப். உம் உம்! எனக்காக மற்றவர்களைக் காக்கச் செய்யலாமோ? ஆரம்பிக்கச் சொல்.

க. உத்தரவு—இதோ. [விரைந்து உள்ளே போகிறாள்.]

சுப். ஏன் ஐயா, நீங்கள் எல்லாம் சுருதி பண்ணிக்கொள்ளுங்கள். அதற்கு ஒரு ஐந்து நிமிஷம் போவானேன் ?

[பக்கவாத்தியக்காரர்கள் உட்கார்ந்து சுருதிபண்ணிக் கொள்கிறார்கள்.]

தங். எத்தனை நாழிகாக்க வேணுமோ, இவ்வளவு நாழிபிடிக்குமென்று தெரிந்திருந்தால் சுந்தரகாண்டம் கூடகொண்டு வந்திருக்கலாம்; நாலு ஆட்டம் ஆயிருக்கும்.

ந. ஆமாம்.

நங். ஆமா, சுந்தரராஜ மொதலியார், எங்கே ஐயா போரீங்கோ?

சுந். இதோ வந்து விட்டேன்—என் ஜோட்டை வெளியில் வைத்து விட்டுவந்தேன். [வெளியில் போய்வருகிருர்.]

நங். அவரு, ஏனு வெளி போரார் தெரிஞ்சுமா?

தங். எல்லாம் தெரியும், கொஞ்சம் சும்மா இருங்கள்.

கல்யாணி, தலைகுனிந்தவண்ணம் வரும் நுபாவதியை அழைத்துக் கொண்டு, வருகிருள்.

அள. அடடா! ஆஞ்சநேய மூர்த்தி! என்ன அழகு! என்ன விநயம்! எங்கம்மா சீதா தேவியே! ஆஞ்சநேய மூர்த்தி'—

வே. அடடா! இதென்னடா இது, சிவபூஜை வேளையிலே கரடி புகுந்தமாதிரி—ஐயா நாயடு காரு, இந்த கச்சேரி ஆகிற வரைக்கும் உங்கள் ஆஞ்சநேய மூர்த்தியை கொஞ்சம் கட்டி வைத்து விடுங்கள்.

அள. அப்படியே, ஆஞ்சநேய மூர்த்தி.

வெங். பார்த்தீர்களா மறுபடியும்?

அள. இனிமேலே இல்லை, ஆஞ்சநேய மூர்த்தி.

சுப். அவரை சும்மா விட்டு விடுங்கள்.

அள. ஆமாம், ஆஞ்சநேய மூர்த்தி.

க. ஐயரவாள், ஆரம்பிக்கலாமோ?

சுப். ஆஹா தடையென்ன, (மற்றவர்களைப் பார்த்து) ஏன் ஆரம்பிக்கச்சொல்லலாமே?

மற்றவர்கள். ஆஹா அதற்கென்ன, ஆரம்பிக்கலாம்.

க. குழந்தையை என்ன பாடச்சொல்லி உத்தரவாகிறதோ?

சுப். அதற்கு இஷ்டமானதைப் பாடச்சொல்.

அள. இல்லை ராமாயணக் கீர்த்தனையிலே—ஆஞ்சநேயமூர்த்தி.—

வெங். என்னடா இழவாயிருக்கிறது! கச்சேரி ஆரம்பத்திலேயேவா ராமாயணக்கீர்த்தனை? அதெல்லாம் கடைசியில் வரும்—கொஞ்சம் பொறும்.

அள. புத்தி, ஆஞ்சநேய மூர்த்தி.

க. ஏதாவது ராகம் ஆலாபனை செய்யச் சொல்லவா குழந்தையை?

சுப். வேண்டாம்—பெண்பிள்ளை ஆலாபனை செய்வதும் ஆண்பிள்ளை பதம் பாடுவதும் ஒன்று—ஏதாவது கீர்த்தனை ஆரம்பிக்கச் சொல்.

[ரூபாவதி ஒரு கீர்த்தனை பாடுகிறாள். பாட்டு முடிந்ததும் அங்கு வைக்கப் பட்டிருக்கும் தட்டில் எல்லோரும் ரூபாய்களைப் போடுகிறார்கள்.]

அள. அடடா! என்ன பாட்டு! என்ன சாரீரம்! என்ன சங்கதி! ஆஞ்சநேயமூர்த்தி—என்னிடத்தில் ரூபாயில்லை ஆஞ்சநேயமூர்த்தி, இருந்தால் மாத்திரம் அட்சரலட்சம் கொடுத்திருப்பேன் ஆஞ்சநேய மூர்த்தி!

நந். பாட்டு நன்னா பேஷா இருந்தது.

சுந் இதோ வருகிறேன்.

நந். எங்கே—போறீ—ஐயா?

சுந். என் குடை இருக்கிறதா பார்த்துவிட்டு வருகிறேன். [போய் வருகிறார்.]

[ரூபாவதி இன்னொரு கீர்த்தனை பாட ஆரம்பிக்கிறாள்.]

வெங். என்ன ரூபாவதி? மறுபடியும் கீர்த்தனை ஆரம்பித்தாயே? இந்தக் கீர்த்தனை எல்லாம் பாகவதர்களுக்கு விட்டு விடவேண்டும். ஏதோ, நல்ல பதமா ஒன்று பாடு

கேட்போம். போனகச்சேரியில்கூட பதம் பாடாமல் முடித்து விட்டாய். இந்தா [பத்துரூபாயைத் தட்டில்போட்டு] நல்ல பதமா ஒன்று பாடு பார்ப்போம்

த. இல்லை, ஏதோ பதம் பாடுகிறதில்லை என்று ஒரு ஏற்பாடு வைத்துக்கொண்டிருக்கிறாற் போலிருக்கிறது.

வே. என்ன ஏற்பாடு? பதம்பாடுவதில் தப்பென்ன?

சுப். அதற்கு இஷ்டமானதைப் பாடட்டுமே.

வெங். ஐயர் அவாள், இதிலெல்லாம் தாங்கள் பிரவேசிக்க வேண்டாம். அது என் இஷ்டம்.

சுப் உம்.—ரூபாவதி உனக்கிஷ்ட மானதைப்பாடு.

[ஒரு சவரனைத்தட்டில் எறிகிருர்]

கோ. (முன்னே எட்டி உட்கார்ந்து) அப்படியா சமாசாரம்! ஒரு கை பார்க்கலாம்! இந்தா ரூபாவதி நூறு ரூபாய! ஒரு பதம்பாடு!

[நூறு ரூபாய் நோட்டை தட்டில் எறிகிருர். ரூபாவதி அந்த நோட்டை தட்டிலிருந்து எடுத்து கோவிந்தகோனன் எதிரில் போட்டுவிட்டு கீர்த்தனத்தை மறுபடியும் ஆரம்பிக்கிருள்.]

க. ஆ! ஆ!—

கோ ஆஹா! ஒரு தேவடியாக்குட்டிக்கி இத்தனை ஆணவமா? என்மூஞ்சியிலே எடுத்து வீசிப்போடுகிருயா! ஒரு பதம் பாடிஞல் ஆச்சுது—இல்லாவிட்டால் என்னை இப்படி அவமானம் பண்ணினதற்காக உன்னை ஆளைவிட்டு என் ஜோட்டால் அடிக்கச்சொல்வேன்!

சுப். என்ன சொன்னீர்?

கோ. ஐயா! உங்கள் சமாசாரம் எனக்கு நன்றுய்த் தெரியும். இதிலெல்லாம் தாங்கள் தலையை நுழைத்துக் கொள்ளாதீர்கள்.

சுப். ஆஹா ! அப்படியா சமாசாரம் ! ரூபாவதி, நீ பதம் பாடாதே, என்ன நடக்கிறதோ பார்க்கலாம் !

[கோபித் தெழுந்திருக்கிறார். பெருங் குழப்பம் உண்டாகிறது; சந்தடியில் மூலையிலிருந்த ஒருவன் ஜோட்டை எடுத்து ரூபாவதியின் மீது எறிய அதை அவள் மீது விழாமல் தன்கையால் சுப்பிரமணிய ஐயர் தடுக்கிறார். உடனே தன் இடுப்பிலிருந்து ஒரு கைத்துப்பாக்கியை எடுத்து மேலே ஒரு வேட்டுபோடுகிறார்; உடனே எல்லாம் நிசப்தமாகி விடுகிறார்கள்.]

சுப். பார்த்தீர்களா ! அந்த குண்டின் வேலையை ! இன்னும் இதில் ஐந்து குண்டுகள் இருக்கின்றன—ஞாபகமிருக்கட்டும்—ரூபாவதி தனக்கிஷ்டமானதைத் தான் பாடுவாள், கேட்க இஷ்டமிருந்தால் உட்கார்ந்து கேளுங்கள், இல்லாவிட்டால் பேசாமல் வெளியே போங்கள்.

அள. அடடா! தட்டுகெட்ட ஆஞ்சநேயமூர்த்தி, இப்படியா முடிந்தது கச்சேரி!

தங். வீட்டிலே இருந்தாலும் சீட்டாடி இருக்கலாம்.

நா. ஆமாம்.

நங். அப்பவே சொன்னோ கேக்கிலே—இங்கே வந்தா தப்பு இருக்குது. [எல்லோரும் வெளியே போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

———

முதல் அங்கம்

இரண்டாங் காட்சி.

இடம்—ஒரு சிறுவீதி.

காலம்—இரவு.

கோவிந்தக்கோனர், முத்துசாமி பிள்ளை, சவுடால் கறுப்பன், கூடலைமுத்து வருகிறார்கள்.

மு. என்னுங்க அது? அவுங்க பேச்செகேக்காதைங்கோ நீங்கோ, இப்போதான் இரண்டு பேருக்கும் அரை அரை டிராம் வாங்கிகொடுத்து இட்டுகினுவந்திருக்கே !

ச. க. என்னுங்க! ஏசமான்! அரைதிராம் எங்கெத்திக்கிங்கோ, ஒருவாய்க்குகூட பத்தலே—ரெண்டு மூணு—நிதானமா தாங்கர ஆசாமிங்க நாங்க! இன்னம் ஒரு ரூபாகொடுக்கச் சொல்லுங்க எசமான்,—

கோவி. ஒரு ரூபாய் தான் தொலைத்துவிடுங்கள் பிள்ளை—அடே, அதுக்குமேலே ஒரு காசுகூட கொடுக்கமாட்டேன் பத்திரம்—போய் சீக்கிரம் வாங்க, அவன் வருகிறசமயமாச்சுது.

கூ. மு. அதெல்லாம் பயப்படாதெங்கோ ஏசமான், அரைநொடியிலே வந்துடமாட்டோம். கடெ பக்கத்திலேயே தான் இருக்குதுங்கோ. [சவுடால்கறுப்பனுடன் போகிறான்.]

கோ. ஏன் பிள்ளை, இந்த பக்கம்தான் வருவான் ஆசாமி என்பதற்குச் சந்தேகமில்லையே ?

மு. இல்லைங்கோ, நேத்து கூடகவனிச்சேன். இந்த சமாசாரம்கேள்விப்பட்டு, அவர் மாமாபோலிஸ் இன்ஸ்பெக்டர், எதிர்பக்கம் காவல்போட்டிருக்கறாரு; ஆளெ அப்படியே

அழுக்கிருனு வந்துடும்படி உத்திரவு செய்திருக்கிருரும். அதுக்குதான் ஆசாமி இந்தச் சந்துவழியாகப் போய் பின் பக்கம் நுழைஞ்சார் நேற்று—நான் பின்னுலேயே போய் கண்டுபிடிச்சேன்.

கோ. எனக்கு ஒரு யோசனை தோணுது; எங்கே அந்த பயக? —அதோவர்ராக—வரட்டும்.

[தன் காலிலுள்ள ஜோட்டைக்கழற்றுகிருர்.]

சவுடால் கறுப்பனும் சுடலைமுத்தும் வருகிருர்கள்.

என்னடா அது? அதிகமாகக் குடித்துவிட்டீர்களா என்ன?

சு. க. இல்லே, எசமான் அதெல்லாம் பயப்படாதைங்கோ! என்னு குடிச்சாலும்—தானத்திலே தானம்—நிதானம் தவறமாட்டோம் நாங்க—பயப்படாதைங்கோ எசமான்.

கோ. அடே, இப்பவே சொன்னேன் நான். சொன்ன வேலையைச் செய்தால் தான் மீதிபணம். இல்லாவிட்டால் ஒரு காசும் காணமாட்டீர்கள்.

சு. நீங்க பயப்படாதைங்கோ எசமான், பழுக்கத் தீர்த்து விடரோம்! அப்புறம் உங்ககிட்ட பஹுமானம் வாங்கப்போரோம்!

கோ. அடே, நான் சொல்வதை கவனமாய்க் கேளுங்கள்—கழியாலே கிழியாலே அடிச்சா காயம்பட்டால் பிறகுவம்பு—என்ஜோட்டைத் தருகிறேன் இதோ—அதனுலே நன்ருக விளாசிவிடுங்கள். [ஒவ்வொருவன் கையிலும் ஒன்றைக்கொடுக்கிருர்.]

அடே, சந்தடி கேட்கிறது, யாரோ வருகிருற் போல் இருக்குது. அவனுட்டம் தானிருக்கிறது—பத்திரம். நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்.

[முத்துசாமி பிள்ளையை அழைத்துக் கொண்டு விரைவில் போகிருர்.]

ச. க. அடே ஆசாமி வர்ராப்போலே இருக்குதடா—மூஞ்சியெ மூடிகினுவர்ராம்பாரு! சாக்கிரதே சாக்கிரதே!

அளகிரிசாமிநாயுடு வருகிறார்.

சு. சாமி, எங்கேபோரைங்க சாமி?

அ. ஏனடாப்பா?—இந்தவழி கலியாணி வீட்டுக்குப்போகிறதா?—அவள் வீட்டுப் பக்கத்து வீட்டிலே ஒருத்தனைப் பார்க்கவேண்டும்.

ச. க. அடே ஆப்பிட்டாண்டா ஆசாமி!—வைடா! வைடா!

[இருவருமாய்ப் புடைக்கின்றனர்.]

அள ஐஐயோ! ஆஞ்சநேய மூர்த்தி! ஆஞ்சநேய மூர்த்தி! என்னை ஏனடாப்பா அடிக்கிறீர்கள்? என்னை ஏனடா அப்பா அடிக்கிறீர்கள்?.

ச. க. நீ தானே சுப்பரமணியரு, எங்க எசமானே அண்ணைக்கி அவமானம் படுத்தினவேன்?

அள. அடே! பாவிகளே! நானல்லடா சுப்பரமணிய ஐயரு!

சு. பின்னே ஏன் கல்யாணி வூட்டுக்கு வழிகேட்டே?

அள. என்னடா அநியாயமாயிருக்குது! தட்டுகெட்ட ஆஞ்சநேய மூர்த்தி! நானல்லடாப்பா அவரு!

சு. க. பின்னே யாரு நீ?

அள. என்னடா சங்கடமாயிருக்குது ஆஞ்சநேய மூர்த்தி! சத்தியமாய்ச் சொல்கிறேனப்பா—அவர் நானல்லடா, என்னை விட்டுவிடுங்கள்.

சு. அடே மூஞ்சியிலே நாமம் இருக்குதுடா! இவர் அல்ல போலே இருக்குதடா!

அள. ஆமாண்டாப்பா ஆஞ்சநேய மூர்த்திகளே, என்னை விட்டுவிடுங்கள்.

சு. க. ஆமாம் உன்னெ உட்டுடரோம், சுப்பரமணியர் எங்கே இருக்கிறாரு சொல்லு, உட்டுடரோம்.

-நேய மூர்த்தி' ஆஞ்சநேய மூர்த்தி! என்னடா
-ருக்கிறது! அவரிருக்கிற இடத்தையா சொல்
-ல்கிறீர்கள்? [-நாற்புறமும் சுற்றிப் பார்க்கிறார்.]

அடி அதை; நீ அவருக்குப் போடாவிட்டால் போகிறது, அவருடைய படத்திற்காவது அதைப் போட்டு வைக்கி றேன்.

ஸ்ரீ. இல்லை நானே போடுகிறேன்—அம்மா.

[அப்படியே செய்கிருள்.]

க. [அப்படத்தருகிற் போய்] ஏனடி, உனக்கென்ன பயித்தி யம் கியித்தியம் பிடித்திருக்கிறதா? இப்படிப்பட்ட புரு ஷன் உனக்கு இன்னும் பத்து ஜன்மம் தவம் பண்ணி ஞலும் கிடைக்கமாட்டார். அழகில் குறைச்சலா? ஐஸ் வர்யத்தில் குறைச்சலா? போன சனிக்கிழமை முதல், பட்டணமெல்லாம் அவரைப் பற்றி புகழ்ந்து பேசாத வர்கள் ஒருத்தருமில்லை. தாசிகளெல்லாம் காசு வேண் டாம் அவர் வந்தாற் போதுமென்று காகிதம் எழுது கிருர்கள். அவராக உன்மீது மோகப்பட்டு, நான் கேட்ட ஐயாயிரம் ரூபாயையும் கொடுத்து, தாஞக வலிய வந் தால், தாஞகவருகிற ஸ்ரீதேவியை காலாலுதைத்துத் தள் ளுவதுபோல் வெறுக்கிருயா?—இப்பொழுதே சொன் னேன். இது தான் என் கடைசி வார்த்தை. இன்றைக்கு நீ அவருக்கு இணங்காவிட்டால், நாளைக்கு, அந்தக் கோவிந்தக் கோனர் என்னைத் தொந்திரவு செய்து கொண்டிருக்கிருர் ஒருவாரமாக, அவரை வரச்சொல்லி விடுவேன் நாளைக்கு!

ஸ்ரீ. அம்மா! அம்மா! நீ எதை வேண்டுமென்ருலும் செய், அதை மாத்திரம் செய்யாதே!

க. ஆனல் என் சொற்படி நட இன்றைக்கு.

ஸ்ரீ. அம்மா, என்னையேன் இப்படி பலவந்தப்படுத்துகிருய்? கொஞ்சம் பொறேன்.

க. எத்தனை நாள் பொறுக்கிறது? குழந்தையாச்சுதே என்று பொறுத்துப் பொறுத்தாயிற்று. இனிமேல் ஒரு நாளும் பொறுக்கமாட்டேன்.

ரூ. அம்மா, உன் வயிற்றிலே பிறந்த—உன் சொந்த குழந்தையாயிருந்தால்—என்னை இப்படி பலவந்தப்படுத்துவாயா ?

க. என் வயிற்றிலே பிறந்தது இப்படி ஜாதி வழக்கத்துக்கு விரோதமா அடம்பண்ணு, ஒரே முறியா முறிச்சிப் போட்டிருப்பேன்!—ஆ! அதிருக்கட்டும். இதென்னடி. ஒன்று இது? புதுபேச்சா யிருக்குது—இத்தனை நாளில் லாதே! என் வயிற்றிலே பிறக்காமல் ஆகாசத்திலிருந்து குதித்து விட்டாயா என்ன ?

ரூ. அம்மா, இனி இந்தக் கதை உதவாது. சற்று முன்பாக நீயே ஒப்புக்கொண்டாயே !

க. நான் என்ன ஒப்புக்கொண்டேன் ? ஓகோ! எனக்குத் தெரிகிறது, இந்தப் புது சட்டம் ஒன்று வந்ததென்று, என் பெண்ணல்ல வென்று கூறி, என் கையினின்றும் தப்பித்துக்கொண்டு போகலாம் என்று பார்க்கிறாயா ?

ரூ. இந்தக் கதை என்கிட்ட சாயாது ! நம்முடைய வேலைக்காரியைக் காலையில் போய்ப்பார்த்த பொழுது அவள் உண்மையைத் தெரிவித்து விட்டாள்.

க. ஆ! ஆ! அந்தக் கிழமுண்டை சாகிறதிற்கு முன்னே அதையும் சொல்லி விட்டாளா? இதை மாத்திரம் சொன்னாளா, இன்னும் ஏதாவது சொன்னாளா ?

ரூ. இன்னும் என்னவோ சொல்ல ஆரம்பித்தாள். இதற்குள் நாக்கு இழுத்துக்கொண்டு பிராணன் போய்விட்டது பாபம் !

க. அந்த மட்டும் என் அதிர்ஷ்டந்தான். ரூபாவதி, நீ படித்திருக்கிறாய், புத்திசாலி, நான் சொல்வதைக் கேள். நீ என் பெண் அல்ல வென்றால் ஒருத்தரும் நம்பமாட்டார்கள் இனி; அந்தக் கிழவியும் போய் விட்டாள். உனக்கென்ன சாட்சி யிருக்கிறது இதை ரூபிப்பதற்கு ? கோர்ட்டில் வியவஹாரம் வந்தால் பத்திமாலையைக் கழுத்தில் போட்டுக்கொண்டு பதினெட்டுபடியும் தாண்டுவேன் அழகர்

கோயிலில்! பிறகு உன்னால் என்ன முடியும்? இந்தா நான் சொல்வதைக்கேள். இந்த வார்த்தையை யாருக்காவது வெளியே சொன்னாய் என்று எனக்குத் தெரிந்ததோ, பிறகு, சத்தியமாக உன் கையையும் காலையும் கட்டி அந்த கோவிந்தக் கோனான் வசம் ஒப்புவித்து விடுவேன்!

ரூ. அம்மா! அம்மா! அதை மாத்திரம் செய்யாதே! வேண்டுமென்றால் என்னைக் கொன்றுவிடு!

க. ஆ! அந்த பயம் கொஞ்சம் இருக்கட்டும்—அதெல்லாம் போனால் போகிறது. இந்த ஒரு விஷயம் யோசனை செய்து பார். பிறந்தது முதல் என் வீட்டில் வளர்ந்து தேவடியாள் பெண் என்று பெயரெடுத்தாயிற்று; இனி யாராவது உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ளுவார்கள் என்று கனவிலும் நினைக்கவேண்டாம். இப்பொழுது உன்னை நான் வீட்டை விட்டுத் துரத்தினால் உன் கதி என்னவாகும் என்று யோசித்துப்பார்! நடுத்தெருவில் அலைந்து, நாலு பெயருடன் சேர்ந்து செத்து சுண்ணும் பாவதை விட, சுகமாக, அவருக்கிணங்கி அவருடன் வாழ்ந்திரு. அவர் உத்தம புருஷன். யானையின் காலிலிருந்து அக் குழந்தையை அவர் அன்று காப்பாற்றியது முதல், அவரைப் புகழ்ந்து பேசாதவர்கள் ஒருவருமில்லை பட்டணமெங்கும். அவர் உன்னை ஆயுள் பரியந்தம் சவரட்சணை செய்வார். [வெளியில் கதவைத் தட்டுகிற சப்தம்] அதோ! அவர் வந்து விட்டார்; முகத்தை இந்த மாதிரி வைத்திராதே. சந்தோஷமாயிரு. நான் சின்னவளாயிருந்தபோது இப்படிப்பட்ட புருஷன் ஒருவன் கிடைத்திருந்தால் இத்தொழிலையே விட்டு விட்டிருப்பேனே; ஜாக்கிரதை, நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். [விரைந்து கீழே இறங்கிப் போகிறாள். ரூபாவதி ஒரு பக்கம் போய் சுப்பிரமணிய ஐயர் படத்தை எடுத்து விட்டு அதன் பின்னால் வைக்கப்பட்டிருக்கும் மீனாட்சியம்மன் தந்தப்பதுமைக்கு நமஸ்கரிக்கிறாள். வெளியில் கதவைத்தட்டுகிற சப்தம்]

ரூ. மீனாட்சி! மீனாட்சி! என் கற்பை நீ தான் காத்தருள வேண்டும் இன்றும்! [கும்பிட்டு விட்டு மறுபடியும் முன்போல் அதைப் படத்தால் மூடி விடுகிறாள்.]

படி வழியாக சுப்பிரமணியஐயர் மேல் மாடிக்கு கல்யாணி பின் தொடர வருகிறார்.

சுப். இதென்ன கல்யாணி புது வழக்கம்?

க. அதெல்லாம் ஒன்றும் ஆட்சேபனை சொல்லாதீர்கள்! அன்றைத்தினம் ஆனையின் காலிலிருந்து உம்முடைய உயிரையும் பாராமல் அந்தக் குழந்தையைக் காப்பாற்றியபொழுது, ஆயிரம் பெயர் கண் பட்டிருக்கும்! என் கண்ணே பட்டிருக்கும். எல்லாருடைய கண்ணும் ஒரு மாதிரியாயிராது, நான் எப்படியும் திர்ஷ்டி சுற்றிப்போட வேண்டும், உட்காருங்கள். ரூபாவதி, தீக்குச்சு பெட்டி கொண்டாடி. இவள் கண்கூட பட்டிருக்கும்! உங்கள் தலைமேலே வைக்கப்போன காலை அப்படியே அந்த யானை நிறுத்திக்கொண்டதே, அப்பொழுது இவள் பயந்து போட்ட கூச்சலை நினைத்துக்கொண்டால் என் கர்ப்பம் கலங்குகிறது இன்னும். ஏற்று அடி இந்த கர்ப்பூரத்தை.

[ஏற்ற, திருஷ்டி சுற்றுகிறாள்.]

சுப். ஆனால் நான் அதிர்ஷ்டசாலிதான்!

க. உங்கள் அதிர்ஷ்டத்துக் கென்ன குறைச்சல், ரூபாவதி அதிர்ஷ்டத்தையல்லவோ சொல்லவேணும். நான் வருகிறேன்; நான் கதவை வெளியில் தாளிட்டுக் கொண்டு போகிறேன். நாளை காலை தான் திறப்பேன். மத்தியிலே தட்டினால் முன்பிரண்டு மூன்று தரம் செய்ததுபோல் நான் திறக்கவேமாட்டேன். [போகிறாள்.]

சுப். ரூபாவதி, இப்படிவா உட்கார். ஏன் இன்னும் பயப்படுகிறாய்? நான் தான் உனக்கு வாக்குக் கொடுத்துவிட்டேனே, உன் உத்தரவின்றி உன்னைத் தொடமாட்டேன் என்று, ஒன்றும் பயப்படாதே. [ரூபாவதி எதிரிலி

ருக்கும் ஓர் நாற்காலியில் மெல்ல உட்காருகிறுள்.] ரூபாவதி, எங்கிருந்து அந்த சமாசாரங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாய் அன்றைத்தினம்?

ரூ. ஆநந்தராயர் மாடியிலிருந்து.

சுப். ஆநந்தராயர் மாடியிலா? ஆநந்தராயர் மாடியில்—என் அம்மான் பெண்சாதியும், அவரது பெண்-முதலியோரும் நின்று கொண்டிருந்தாற் போலிருக்கிறதே! அவ்விடம் உன்னைக்காணவில்லையே நான்.

ரூ. நான் எல்லோருக்கும் பின்புறமாக நின்று கொண்டிருந்தேன்.

சுப். ஏன்?—ரூபாவதி, என்னிடம் ஏதோ ஒளிக்கிறுய்? என் கண்ணைத்துடைக்கிறுய்? ரூபாவதி, என்ன நடந்தது சொல்—நான் உன் இடத்தில் ஏதாவது ஒளிக்கிறேனு? நீ என்னிடமிருந்து ஒளிக்கலாமா?—உண்மையைச்சொல்

ரூ. என்பேரில் கோபித்துக் கொள்ளக் கூடாது

சுப். உனக்கென்ன பயித்தியமா? நான் எதற்காகக் கோபம் கொள்ளவேண்டும், நடந்ததைச்சொல்.

ரூ. நாட்டுக்கோட்டை செட்டியார் ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் அன்றைத்தினம் உற்சவத்திற்காக புதுவிமானங்கள் செய்து வைத்தாரென்று கேள்விப்பட்டு, நானும் என் தாயாரும்—கல்யாணியும்—பார்க்கப்போனேம். ஆநந்தராயர் தகப்பனருக்கும் கல்யாணிக்கும் சிறுவயதில் ஸ்நேகமாம். ஆகவே அவர் பிள்ளை எங்களைத் தன் மேல்மாடியிலிருந்து வேடிக்கைப்பார்க்க உத்தரவு கொடுத்தார். அங்கே போய் அங்கிருந்த மற்றவர்களோடு நானும் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். என் பக்கத்திலிருந்தவர்கள் உங்கள் அம்மான் வீட்டார் என்று பிறகு தான் தெரிந்தது; உங்கள் அம்மான்மகளைப்பார்த்து அங்கிருந்த ஒரு கிழவி, ஏனடி அம்மா, இவள் உனக்கு அக்காளா தங்கையா என்று—என்னைச் சுட்டிக் கேட்டாள்—அதற்கு—அதற்கு—உம்முடைய அம்மான்

மகள், கோபங்கொண்டு—உனக்கென்ன பயித்தியம் பிடித்து இருக்குதா? எவளோதேவடியாள் நாரியை எனக்கு அக்காளா தங்கையா என்று கேட்கிறாயா!—என்று வைதாள்! [அழுகிறாள்.]

சுப். அடடா!—ரூபாவதி, உன் கண்ணைத் துடைத்துக்கொள் என்ன புத்தியில்லாதவனா யிருக்கிறேன்! இது வரையில் எனக்குத் தோன்றாமலிருந்ததே!—

[எழுந்து உலாவுகிறார்.]

ரூ. என்ன சமாசாரம்?

சுப். ஒன்றுமில்லை—அப்புறம் என்ன நடந்தது சொல்.

[உட்காருகிறார்.]

ரூ என்னை மாத்திரம் ஒளியாது சொல்லும்படி கேட்டீரே—நீங்கள் மாத்திரம் என்னிட மிருந்து ஒளிக்கலாமா?

சுப். வேறொன்றும் விசேஷமில்லை—உன்னை முதல் முதல் அந்தக்கச்சேரியில் பார்த்த பொழுது, உன் முகம்யாரோ நான் பார்த்த ஜாடையா இருந்தது என்று பட்டது. நான் பிறகு பலதரம் யோசித்துப் பார்த்தும் இன்னாருடைய ஜாடை யென்று தோன்றாமற் போயது. இப்பொழுது நீசொன்ன பிறகு தெரிகிறது. ரூபாவதி, அவள் சொன்னதை நீ கவனிக்கவேண்டாம். அவளுக்கு நான் செய்ய வேண்டியது தெரியும். அவள் தகப்பன் அவளை எனக்கு எப்படியாவது கலியாணம் பண்ணிக் கொடுக்கவேண்டு மென்று பார்க்கிறார். எங்கப்பா ஆணை, அவளை நான் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறதில்லை பயப்படாதே! அதிருக்கட்டும் ரூபாவதி, அந்த யானை என்னை மிதிக்க விருந்த சமயத்தில் நீயும் கூச்சலிட்டதாக உன் தாயார் சொன்னது வாஸ்தவமா?

ரூ. வாஸ்தவம் தான்—என்னையுமறியாதபடி வாய்தவறி வந்து விட்டது!

சுப். என்னவென்று கூச்சலிட்டாய் சொல்—வெட்கமென்ன இதில்—கண்ணல்ல—சொல்.

ஸ்ரீ. மீனாட்சி ! மீனாட்சி ! நீதான் காப்பாற்றவேணும், என்று கூவினேன். அங்கிருந்தவர்களெல்லாம் என்னைத் திரும்பிபார்த்தார்கள்; முகவாய்க்கட்டையில் கையை இப்படி வைத்துக் கொண்டு உங்கள் அம்மான்மகள் மாத்திரம், ஏதோ வாய்க்குள் முணுமுணு என்று திட்டிக் கொண்டிருந்தாள்; யானை உம்மை மிதித்தே விட்டது என்று எண்ணினேன். மீனாட்சிதான் உம்மைக்காப் பாற்றினாள் என்று நம்புகிறேன்.

சுப். ஆம், நான் தப்பியது தெய்வாதீனம் தான்

ஸ்ரீ. மிகவும சந்தோஷம், இப்பொழுதாவது தெய்வம் ஒன்று உண்டு என்று ஒப்புக்கொள்ளுகிறீர்களே.

சுப். நான் எங்கே ஒப்புக்கொண்டேன் ?

ஸ்ரீ. சற்று முன்பாக நீர் தப்பியது தெய்வாதீனம் என்று சொல்லவில்லையா நீங்கள் ?

சுப். அப்படியா சொன்னேன்? என்னையு மறியாதபடி வாய் தவறி வந்திருக்கவேண்டும்.

ஸ்ரீ. நான் அப்படி நினைக்கவில்லை,

சுப். உம்—நீ நினைப்பதும் ஒரு விதத்தில் கொஞ்சம் வாஸ்த வந்தான்.—பத்து பதினைந்து நாட்களாக என் மனதில் இப்படி என்னென்னவோ யோசனைகளெல்லாம் தோன் றுகின்றன. இல்லாவிட்டால் முப்பத்து மூன்று வருஷங்க ளாகக் கோயிலுக்குப் போகாதவன், இன்று, அந்தக் குழந்தையைக் காப்பாற்றினேனே, அதன் தகப்பனார், குழந்தை பிழைத்ததற்காக மீனாட்சி சுந்தரேசருக்கு அபிஷேகம் செய்விக்கிறேன் நீங்கள் வரவேண்டுமென்று அழைத்தபொழுது, ஏன் போகவேண்டுமென்று என் மனதிற்பட்டது ?

ஸ்ரீ. போயிருந்தீர்களா என்ன கோயிலுக்கு ? மிகவும் சந்தோ ஷம். தெய்வமேது கிய்வமேது என்று சொல்லிக் கொண் டிருந்தவருடைய மனதை அவ்வளவாவது திருப் பினளே மீனாட்சி !

சுப். என்ன திருப்பினாள் போ! எல்லாம் சரியாகத்தான் இருந்தது; மீனாட்சி சன்னதியில் பட்டர் தீபாராதனையெல்லாம் முடித்து குங்குமம் என் கையில் கொடுத்தபொழுது, உன் ஞாபகம் வந்து விட்டது! நான் என்ன செய்கிறது?

ரூ. ஓஹோ! இப்பொழுது அர்த்தமாச்சுது; நீங்கள் வந்தவுடன் என்று மில்லாதபடி முகத்தில் குங்குமம் எப்படி வந்தது என்று—

சுப். என்ன! இன்னும் அந்த குங்குமம் இருக்கிறதா என்ன!

[அதை அழிக்கப் போகிறார், உடனே ரூபாவதி அவர் கையைப் பிடித்துத் தடுக்கிறாள்.]

ரூ. வேண்டாம்! வேண்டாம்! அழிக்காதீர் அதை; மீனாட்சி அனுக்கிரஹித்துக் கொடுத்ததை நீர் அழித்துவிடலாமா?

சுப். நீ சொல்வதிலும் கொஞ்சம் வாஸ்தவம் இருக்கிறாற்போலத்தான் தோன்றுகிறது. மீனாட்சி அம்மன் அனுக்கிரஹம் கொஞ்சம் என்னிடம் இருக்கிறதுபோலத் தான் தோற்றுகிறது. இல்லாவிட்டால் நான் உன்னைத் தீண்டக் கூடாது என்றிருந்தவன், நீயாக எப்படி என்னைத் தீண்டினாய் இப்பொழுது?

ரூ [நாணத்தால் தலை குனிந்து] அதை நான் கவனிக்கவில்லை. எல்லாம் மீனாட்சியின் அருள்.

சுப். என்ன மீனாட்சியின் அருளோ! [எழுந்திருந்து உலாவி] என்னை இந்தக் கஷ்டத்தில் வைக்கிறாளே இன்னும்! ரூபாவதி! நான் படும் கஷ்டம் உனக்கு கொஞ்சமாவது தெரியவில்லை! பசிப்பசி என்று அலைபவன் முன் ஒரு தங்கக்கிண்ணத்தில் அமிர்தத்தை வைத்து அவன் வாயைக் கட்டிவிட்டு அதைத் தொடலாகாது என்பது போல் இருக்கிறது. [அங்கு ஒரு பக்கம் வைத்திருக்கும் தன் படத்தைப் பார்த்து] அடடா! இது எங்கிருந்து முளைத்தது இவ்விடத்தில்—இத்தனை நாள் இல்லாமல்!

ரூ. மதுரைநேசன் பத்திரிகையில் அந்தயானை சமாசாரம் அச்சிட்டபொழுது உம்முடையபடம் ஒன்று போட்டிருந்தது. அதைவாங்கிப் படித்தபிறகு இந்தப் படத்தை மாத்திரம் கத்திரித்து அட்டையில் ஒட்டி சட்டம் போட்டு வைத்தேன்.

சுப். அதெல்லாம் சந்தோஷம் தான்; இந்தமாலையார் போட்டது இதற்கு?

ரூ. நான் தான் போட்டேன்.

சுப். எனக்குமாத்திரம் மாலை இல்லை, இந்த படத்திற்கு மாத்திரம் மாலையோ? [அதை எடுத்துவிட படத்தை எடுக்கும் பொழுது, அதன்பின் பூஜை செய்யப் பட்ட மீனாட்சியம்மன் தந்தவிக்கிரத் தைக்கண்டு.]

இதென்ன இது? இன்றைக்கென்ன, புதுமையின்மேல் புதுமையாய் இருக்கிறது எல்லாம்!

ரூ. இதுதான் நான் தினம் பூஜை செய்யும் மீனாட்சியம்மன் விக்ரஹம்.

சுப். [அதை உற்றுப் பார்த்து] என்ன அழகாயிருக்கிறது! [அங்கிருக்கும் குங்குமத்தை நெற்றியில் கொஞ்சம் அணிந்து கொண்டு] ரூபாவதி, இனிமேல் உன்னை—மீனாட்சி—என்று தான் அழைக்கப் போகிறேன்.

ரூ. உங்கள் இஷ்டம்.

சுப். [படத்தை முன்பு போல் வைத்து] மீனாட்சி, இந்த மாலையை படத்திற்குப் போடவா?

ரூ. போடுங்கள்.

சுப். உம்! [பெருமூச்செறிந்து அப்படியே செய்கிறான்.] மீனாட்சி! மீனாட்சி! [ஒரு பக்கமாய்ப் போய் நாற்காலியில் உட்காருகிறார் தலை சாய்த்த வண்ணமாய்]

ரூ. [அவரருகிற் போய்] ஐயோ! உங்களுக்கு இவ்வளவு மன வருத்தம் உண்டுபண்ணுகிறேனே யென்று எனக்கு எவ்வளவு துக்கமாயிருக்கிறது தெரியுமா உங்களுக்கு!—கொஞ்சம் ஏதாவது பாடுகிறேன் கேட்கிறீர்களா?

சுப். வேண்டாம்! வேண்டாம்!

ரூ. ஐயோ! நான் என்ன தப்பிதம் செய்தேன், நீங்கள் இவ்வாறு என்மீது கோபங்கொள்ள?

சுப். ஐயோ! உன்மீது ஒரு தப்பிதமு மில்லை. வாஸ்தவத்தைச் சொல்கிறேன் கேள். உன்னைப் பார்த்து நான் பேசும்பொழுதெல்லாம் உன்னிடம் ஒன்றும் ஒளிக்கலாகாது என்று எனக்குள் ஏதோ உந்துகிறது. உண்மையைச் சொல்கிறேன் கேள். நீ பாடும் பொழுதெல்லாம் எனக்கு ஆநந்த பரவசம் உண்டானபோதிலும், பிறகு அப்பாட்டுகளின் தாத்பர்யங்கள், நான் முயன்றும் மறக்க முடியாதபடி, என் ஞாபகத்திற்கு வருகின்றன. அப்பொழுது என்னைப் பார்க்கிலும் பாபிகள் இவ்வுலகில் உண்டோ என்று என்னையே நான் வெறுக்கின்றேன்.

ரூ. அப்படிச் சொல்லாதீர்கள்; உங்களைப் புண்ணியவான் என்று பட்டணம் முழுவதும் புகழ்கின்றதே! நான் அல்லவோ இப்பாப ஜென்மம் எடுத்தவள்; உங்களை என் பாட்டினாலும் கூட சந்தோஷப் படுத்த அசக்தளாயிருக்கின்றேனே. [துக்கிக்கிருள்.]

சுப். மீனாட்சி, துக்கப்படாதே; நான் எதைப் பாடச் சொல்கிறேனோ அதைப் பாடுகிறாயா?

ரூ. ஆகட்டும்.

சுப். ஆனால் ஒரு பதம் பாடு.

ரூ. பதமா!

சுப். ஆா், ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு மறுக்கலாமா நீ?

ரூ. 'அப்படியே—மீனாட்சி! மீனாட்சி!

[ஒரு பக்கம் போய் தம்புரை எடுத்து, மீட்டி ஓர் பதம் பாடுகிறாள்.]

சுப். [அவள் அருகிற் போய் உட்கார்ந்து பாட்டு முடிந்தவுடன்] கண்ணே! ரூபாவதி! என் மனதை உன் பாட்டால் இவ்வாறு குழைத்து விட்டு, நீ மாத்திரம் இணங்காதிருக்கலாமா? உன் மனம் தான் என்ன கல்லோ? உனக்கென்

மீது கொஞ்சமேனும் கருணையில்லையா? இனியாவது இணங்கமாட்டாயா?

ஸ்ரீ. நான்—கேட்கிற—ஒரு நிபந்தனைக்குட்பட்டால்.

சுப். அப்படியே ஆகட்டும், என்ன வேண்டுமென்றாலும் கேள். நானுகச் சொல்லுகிறேன், உன்னையன்றி வேறொரு பெண்ணையும் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை என் ஜன்மமுள்ளளவும்!

ஸ்ரீ. இந்தமாதிரி இதுவரையில் எத்தனை பெண்களிடத்தில் சத்தியம் செய்திருக்கிறீர்கள்?

சுப். [அவளைக்கோபித்துப் பார்த்துப் பிறகு நகைத்து] மீனாட்சி, நீ கேட்பது மிகவும் நியாயமே! உன்னிடத்தில் என்ன மஹிமை இருக்கிறதோ தெரியவில்லை. நீ என்னை ஏறெடுத்துப் பார்த்து ஏதாவது கேட்டால், நான் பொய்பேச முயன்றாலும் என்னால் எழவில்லை. ஆகவே நான் சத்தியமாகச் சொல்கிறேன்—உண்மையாய் நம்பு—இதுவரையில் நான் அனேக பெண்கள் மீது இச்சைப்பட்டிருக்கிறேன், ஆயினும் அதற்கும், உன் மீதில் எனக்கிருக்கும் பட்சத்திற்கும்—பூனைக்கும் ஆனைக்கும் உள்ளபேதமிருக்கின்றது. அதை இன்னதென்று என்னால் சொல்ல முடியவில்லை. அவ்வளவு தான் என்னால் சொல்லமுடியும்.

ஸ்ரீ. கொஞ்சம் முயன்று பாருமே, என் பொருட்டு, கஷ்டமாயிருந்தபோதிலும்.

சுப். நாலைந்து நாட்களாக இதைப்பற்றியே யோசித்தும் தெரியாதது இப்பொழுது உடனே தெரியப் போகிறதோ? [எழுந்து உலாவுகிறார்.]

அது—அது—ஆ! நான் சொல்வதைக்கேள். மற்றவர்களை எல்லாம் நான் சந்தித்த பொழுது என் சுகத்தையே நான் நாடினேன்—உன்னைப்பார்க்கும் பொழுது உன் சுகத்தையே நான் தேட வேண்டுமென்று தோற்றுகிறது.

ஸ்ரீ. [எழுந்து] சத்தியமாக?

சுப். சத்தியமாக, இந்த மீனாட்சியின் மீதாணை!

ஸ்ரீ. ஆனால்—என்னைக்கலியாணம் செய்து கொள்ளுகிறீரா?

சுப். [திடீரென்று நின்று] என்ன?

ஸ்ரீ. என்னை—விவாஹம் செய்துகொள்ளுகிறீரா?

சுப். உன்னை—கலியாணம்!—விவாஹம்!—

[ஒரு புறமிருக்கும் நாற்காலியில் போய்ச்சாய்கிறார்.]

ஸ்ரீ. [அருகில் மெல்ல போய்] உம்!—உமது மனதில் என்ன நினைக்கிறீர்—என்பதைச் சொல்லவா?

சுப். சொல்.

ஸ்ரீ. பிறகு என்மீது கோபங்கொள்ளக்கூடாது.

சுப் இல்லை சொல்.

ஸ்ரீ. சத்தியமாக?

சுப். சத்தியமாக.

ஸ்ரீ. கேவலம் ஒரு தாசிப்பெண் நம்மைக் கலியாணம் செய்து கொள்ளும்படி கேட்கிறாள் அல்லவா என்று ஆச்சரியப் படுகிறீர்! வாஸ்தவம் தானே?

சுப். ஹாம்! [பெருமூச்செறிகிறார்.]

ஸ்ரீ. நான் சொல்வதைக் கேளும்—நான் தாசிப்பெண் அல்ல—கல்யாணியின் மகள் அன்று—இல்லை அவள் வயிற்றிற் பிறந்த மகள் என்றே வைத்துக்கொள்வோம்—ஒரு தாசியின் வயிற்றிற் பிறந்த மாத்திரத்தில் நான் தாசியாய் விடுகிறேனோ? என் பிறப்பிற்கு நான் எப்படி உத்தரவாதம்? இவ்வுலகத்தில் ஒருத்தரும் தங்கள் பிறப்பிற்கு உத்தரவாதமல்ல' பரமேஸ்வரன் தான் அதற்கு உத்தரவாதம். அதற்குக் காரணம் அவரைக் கேட்கவேண்டும். எங்கள் நடத்தைக்கு நாங்கள் உத்தரவாதம் என்று சொல்லுவீர்கள்; ஒப்புக்கொள்ளுகிறேன். அதைப்பற்றி சற்று யோசிப்போம். இந்நாட்டில் தாசிகள் வீட்டிற் பிறக்கும்

பெண்களை எல்லாம் எடுத்துக்கொண்டால், நூற்றில் ஐந்து பெயர் தங்களுக்கு வயதுவந்தவுடன், தாங்களாக தாசித்தொழிலையே புரிய வேண்டுமென்று விரும்புகிருர்கள் என்று நினைக்கிறீர்களா நீங்கள் ? அவர்கள் தாய்மார்கள் தான், தாங்கள் அனுபவித்த கஷ்டங்களையெல்லாம் மறந்து தங்கள் பெண்களைத் தாசிகளாக்கிவிடவேண்டுமென்று விரும்புகிருர்கள் என்று நினைக்கிறீரா ? நான் சத்தியமாகச் சொல்கிறேன். நூற்றில் தொண்ணூற்றைந்து பெண்கள் கெடுவதெல்லாம், உம்மைப்போன்ற, தங்கள் சுய நன்மையை நாடி, பிறகு அவர்களுக்கு நேரும் கெடுதியைக் கருதாது, அவர்கள் கற்பையழிக்கத்தேடும், ஆண்மக்கள் இருப்பதனுல்தான்! ஏதோ பூர்வஜன்மவசத்தால் இந்தப் பெண் ஜென்மம் எடுக்கிருேம்; அவ்வளவுதான் எங்களில் பெரும்பாலர் செய்யும் பாபம் ! பிறகு எங்கள் கற்பை அழித்து கணிகையர்களாக்கி கடைவீதியில் அலையவிடுகிற பெரும்பாவம் ஆண்மக்களுடையதே ! ஆண்மக்களுடையதே !

சுப். வாஸ்தவம் ! வாஸ்தவம்! [முகத்தை வஸ்திரத்தால் மூடிக்கொள்கிருர்.]

ரு. ஐயோ ! நான் என்ன பேசினேன் ! என்னபேசினேன் ! வீணுக உமது மனத்தைப் புண்படுத்தினேனே! என்னை மன்னியும் ! மன்னியும் ! [அவர்காலில் விழுந்து புலம்புகிருள்.]

சுப். பெண்ணே! எழுந்திரு! நீ என்னை மன்னிப்புக் கேட்பது தவறு. நான் உனது மன்னிப்பைக்கேட்க வேண்டும். எழுந்திரு தயவுசெய்து.

ரு. [எழுந்து] எனக்கு வந்த ஆக்கிரஹத்தில் ஏதோ பிதற்றிவிட்டேன். அதற்காகத் தாங்கள் என் மீது கோபிக்கலாகாது. உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

சுப். பிதற்றினுயா? ஹூம்.—நீ கூறியவார்த்தைகளையெல்லாம் அந்த மீனுட்சியே உன்வாயின் மூலமாக எனக்கு போதித்த உபதேசமாகக் கொள்ளுகிறேன். மீனுட்சி!

இனி ஒன்றும் நீ துக்கப்படவேண்டாம். எதை நான் அழிக்கப்பார்த்தேனே அதைக்காப்பது என் உயிர் உள்ளளவும் என் கடனாகும்.

ரு. எல்லாம் மீனாட்சியின் கருணை; தாங்கள் கூறியதை மாத்திரம் மறக்கக் கூடாது.

சுப். என் உயிருள்ளளவும் மறவேன், இது சத்தியம்.—பெண்ணே, நான் முதல் நாள் இங்கு வந்தபொழுது, ராமலிங்கசுவாமிகள் பாட்டில் "பூமாந்தும்" என்னும் பாட்டைப் பாடினாயே, ஞாபகம் இருக்கிறதா?—அதை இப்பொழுது கொஞ்சம்பாடு.

ரு. ஏன் இப்பொழுது அந்தப்பாட்டு ?

சுப். என்னைப் போன்றவர்களுக்காகத் தான் அம்மஹான் பாடியிருக்கிறார் அந்தப் பாட்டை. அதன் அர்த்தம் அப்பொழுது என் புத்தியிற் படவில்லை. இப்பொழுது தான் கொஞ்சம் தெரிகிறது.

ரு. [தம்பூரை மீட்டிப் பாடுகிறாள்.]

"பூமாந்தும் வண்டென நின்பொன் அருளைப் புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ் சார்ந்துநின்றார் ஐயோநான்
காமாந்த காரமெனும் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே."

சுப். இன்னொருமுறை—காமாந்த காரமெனும்—அந்த வரியைப்பாடு.

ரு. [பாடுகிறாள்.] "காமாந்த காரமெனும் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே."

சுப். காமாந்தகாரமெனும் கள்ளுண்டு கண்மூடியிருந்த என்னைக் கண்திறக்கச் செய்தாரே இப்பொழுதாவது உன் மூலமாக! சரி, பெண்ணே, இப்பொழுது நான் என்ன செய்யவேண்டும் சொல்—மீனாட்சி, நீ கேட்டதை மறுக்கிறேன் என்று எண்ணாதே. ஆயினும் உலகப்பழிக்கு அஞ்சுகிறேன். பிறகு அதைப் பற்றியோசிப்போம்—இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் சொல், உன் சொற்படி நடக்கிறேன்.

ஸ்ரீ. எனக்கு ஒரு யுக்திதான் தோற்றுகிறது.

சுப். என்னசொல்.

ஸ்ரீ. அதைச் சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கிறது.

சுப். என்னிடம் சொல்ல வெட்கமென்ன? என்னை உன் தகப்பனாராக எண்ணிக்கொள்.

ஸ்ரீ. அப்படி எண்ணிக்கொள்ளமாட்டேன்.

சுப். இல்லை — உன் தமயனாக எண்ணிக்கொள்.

ஸ்ரீ. அதுவும் மாட்டேன்!

சுப். என்னடா கஷ்டமாயிருக்கிறது! உன்சினேகிதனாக எண்ணிக்கொள்ளேன்.

ஸ்ரீ. என் மீது கோபங்கொள்ளாதீர்—இந்தப்பலஹாரத்தைக் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு கொஞ்சம் உறங்கிவிட்டுப் போம். நான் அந்த மூலையில் படுத்துக்கொள்ளுகிறேன்.

சுப். உனக்கென்ன பயித்தியம் ஏதாவது உண்டா என்ன? ஏன் அப்படிச்செய்யும்படி கேட்கிறாய்?

ஸ்ரீ. கல்யாணி இன்று நான்-உமக்கிணங்கா விட்டால்-நாளை அந்த கோவிந்தக் கோனாரை அழைத்து அவரிடம் என்னை ஒப்புவிப்பதாகக் கூறினாள்.

சுப். அப்படியா சொன்னாள்!

ஸ்ரீ. அவளுடைய குணம் உங்களுக்குத்தெரியாது. அவள் ஒன்று கூறினால் எப்படியும் அதைச்செய்து முடிப்பாள். அன்றியும் நான் அவள் வயிற்றிற் பிறந்த பெண் அல்லவென்று நான் அறிந்து கொண்டேன் என்று என்மீது கோபமும் கொண்டிருக்கிறாள்.

சுப். அடடா! வாஸ்தவமாகவா? முன்பே கேட்க வேண்டுமென்றிருந்தேன். அது எப்படி? நீ அவள் மகள் அல்ல? பிறகுயார்மகள்?

ஸ்ரீ. அது எனக்குத்தெரியாது. நான் சிறு குழந்தையாய் இருந்தது முதல், எனக்குத்தாதியாயிருந்து என்னை

எடுத்து வளர்த்தகிழவி ஒருத்தி, இன்று இறந்துபோனாள். அவள் இறப்பதன் முன் என்னை வரவழைத்து கல்யாணி என் தாயல்லவென்று தெரிவித்தாள். பிறகு யார் என்னுடைய தாயார் என்று கேட்டேன். பதில் சொல்வதன் முன் அவள்வாய் குளறிப் போயிற்று என்னூர் அதிர்ஷ்டத்தால்—ஆயினும் என் கழுத்தைக் காண்பித்து சரடு, சரடு, என்று மாத்திரம் இரண்டு மூன்று முறை குளறிச்சொன்னாள்.

சுப். என்ன ஆச்சரியம்! இந்த சரட்டில் ஏதாவது சூட்சமம் இருக்கிறதா?—இதைக்காட்டு பார்ப்போம். இது தற்காலத்திய நகையாயில்லை, பழையகாலத்து மோஸ்தராயிருக்கிறது. அசங்கியம் பிடித்த இதை ஏன் அணிந்து கொண்டிருக்கிறாய் என்று பலதரம் கேட்கவாயெடுத்தேன். அதைக் கொடுபார்க்கலாம்.

ரு. இதைக்கழற்ற முடியாது. நான் அறிவு தெரிந்தநாள் முதல் என் கழுத்தில் தானிருக்கிறது; நான் பெரியவளாயின பிறகு இதைக் கழற்ற முடிவதில்லை.

சுப். அப்படியே காட்டு பார்ப்போம்.

[அந்த நகையைப் பரிசோதித்துப் பார்க்கிறார்.]

சாதாரணமாக இருப்பதைவிட பருமனாக இருக்கிறது, இதனுள் ஏதாவதிருக்கிறதா? வேறுவழியில்லை, கல்யாணியை நேரில் அழைத்துக் கேட்கிறேன்.

ரு ஐ ஐயோ! வேண்டாம்! வேண்டாம்? எனக்கு பயமாயிருக்கிறது.

சுப். மீனாட்சி—ஒன்றும் பயப்படாதே! நானிருக்கிறேன்.

[கதவண்டைப்போய் தட்டுகிறார் இரண்டு மூன்று முறை.]

க. [வெளியிலிருந்து] ஏன்? மருமகப்பிள்ளை, என்ன சமாசாரம்?

சுப். கதவைத்திற சொல்கிறேன்.

க. நான் மாட்டேன். நீங்கள் அப்படியே போய் விடுவீர்கள் முன்பு இரண்டு மூன்று முறை செய்தது போல்.

சுப். நான் அப்படிச் செய்யவில்லை, கதவைத்திற.

க. சத்தியமாக ?

சுப். சத்தியமாக. [கதவைத்திறந்து கொண்டு கல்யாணி உள்ளே வருகிருள்.]

கல்யாணி, அப்படி உட்கார். உன்னைச் சில கேள்விகள் கேட்கவேண்டும்.

க. [சுற்றிப்பார்த்து] ஏனடி ! நான் அவ்வளவு சொல்லியும்! என்குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக்காம்பே !

[ரூபாவதியைப்புடைக்கப் போகிருள்; உடனே சுப்பிரமணிய ஐயர் தன் இடுப்பிலிருந்து கைத்துப்பாக்கியை வெளியில் எடுத்து அவள் முகத்தின் நேராகக் காண்பிக்கிருர்.]

சுப். நில் அங்கே! அவளைத் தீண்டாதே! உட்காரிப்படி—எதாவது கூச்சல்கிச்சல் போட்டாயோ அப்படியே சுட்டு விடுவேன் ஆகிறது ஆகிறதென்று.

க. [பயந்து நடுநடுங்கி] இல்லை! இல்லை ! [உட்காருகிருள்.]

சுப். [எதிரில் இருக்கும் நாற்காலியில் உட்கார்ந்து, அருகிலிருக்கும் மேஜையின்மீது கைத்துப்பாக்கியை வைத்து] கல்யாணி, ரூபாவதி யாருடைய மகள் ? நிஜத்தைச் சொல்.

க. வாஸ்தவமாக—எனக்குத் தெரியாது !

சுப். நிஜத்தைச் சொல், உனக்கு ஐந்நூறு ரூபாய் இனும் தருகிறேன். இதோ என் செக்புஸ்தகம்.

[அதை எடுத்து மேஜையின் பேரில் வைக்கிருர்.]

க. ஐயோ! வாஸ்தவமாக எனக்குத் தெரியாதுங்க. அந்தக் கிழமுண்டை செத்துப் போனளே—அவளுக்குத் தான் தெரியும்; அவள் என்னிடம் சொல்லவேயில்லை.

சுப். ரூபாவதி உனக்கு எப்படி கிடைத்தாள் ?

க. அந்தக்கிழவி ஒருநாள் பச்சைப்பாலகனாய் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தாள். அது முதல் என் சொந்த குழந்தையைப்போல் எவ்வளவோ ஆசையோடுவளர்த்து வந்தேன், இந்தப்—பெண்ணை !

சுப். கல்யாணி, ஏதோ ஒளிக்கிறாய், உண்மையைச் சொன்னால்தான் உனக்கு இந்த ஐந்நூறு ரூபாய் கொடுப்பேன். இல்லாவிட்டால் அரைக்காசும் கிடையாது. ரூபாவதியின் தாயார் யார்? என்ன ஜாதி?

க. வாஸ்தவமாக எனக்குத் தெரியாதுங்க; ஒருநாள் மாத்திரம்.—

சுப் உம், என்ன ?

க. ஒரு நாள்—அந்தக் கிழவி இந்த சரடைக்கொண்டுவந்து போட்ட பொழுது—உம்—நான் செய்து இவள் கழுத்தில் போட்டபொழுது—அந்தக் கிழவி, பிராம்மணப் பெண்ணுட்டம் இருக்குதம்மா என்று சொன்னாள்.

சுப். உம்—அது போகட்டும். யாராவது ஒரு பெண்ணை அவள் மனதிற்கு விரோதமாக இந்தத்தொழில் புரியும்படி எவளாவது பலவந்தப் படுத்தினால், அவளுக்கு போலீஸ் கோர்ட்டில் தண்டனை விதிக்கப்படும், என்று ஒருசட்டம் இருக்கிறது தெரியுமல்லவா உனக்கு? ஆகவே, இப்பொழுது நான் ரூபாவதியை அழைத்துக் கொண்டு போகப் போகிறேன், ஏதாவது கூச்சல் கீச்சல் போட்டாயா, அப்படியே உன்னை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுவேன்—என்மாமாவிடம்.

க. ஐயோ!—அய்யரவாள்! பிறகு என் கதி என்னவாகிறது? நான் எப்படி பிழைப்பேன், இக்கிழ வயதில்? [அழுகிறாள்.]

சுப் கல்யாணி, நீயே யோசித்துப்பார். உன் வயிற்றை வளர்ப்பதற்காக ஒரு பாவமுமறியாத ஒரு பெண்ணை உன் ஆயுசில் நீ அனுபவித்த கஷ்டங்களையெல்லாம் அறிந்தும்,

இத்தொழிலுக்கு உடன்படும்படி நீ பலாத்காரம் செய்யலாமா ?

க. [அழுதுக் கொண்டே] எல்லாம் இந்தப் பாவியால் வந்தது! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்தேன்! பாட்டு கிட்டு எல்லாம் சொல்லிக்கொடுத்தேன்! இந்தக் கதியிலே என்னை விட்டு விட்டுப் போகிறாள் !

சுப். நீ அதற்காகத் துக்கப்படாதே—நான் கொடுத்த ஐயாயிரம் ரூபாய் இருக்கிறதல்லவா ?

க. அதை யெல்லாம் கடன்காரர்—மாறுபாடிகள்—அப்பொழுதே வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

சுப். எவ்வளவு நிஜமோ ?

க. சத்தியமாகச் சொல்கிறேன், ஆணைப்படி! தோஷமில்லை என்று சொல்லுங்கள்.

சுப். ஆனால் இந்தா, இதோ ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் தருகிறேன் எடுத்துக்கொள். [செக் ஒன்றை எழுதி அவள் கையில் கொடுத்து] இனி ரூபாவதி உன் பெண் என்று கூறவும் கூறாதே, அவளைப்பின் தொடரவும் தொடராதே.

க. இல்லைங்க—எப்பொழுதாவது உங்கள் வீட்டுக்கு வந்து பார்த்து விட்டுப் போகிறேனே ?

சுப். அதெல்லாம் உதவாது. அவளைப் பின் தொடருவதில்லை என்று சத்தியம் செய்யாவிட்டால், நாளை காலை எழுந்தவுடன் இந்தச் செக்கை மாற்றவேண்டாம் என்று பாங்கிக்கு எழுதி விடுவேன்.

க. இல்லைங்க.

சுப். சத்தியம் செய்.

க. சத்தியமாக—ஆனால் நான் போட்ட நகைகளை யெல்லாம் எனக்குக் கொடுத்துவிடச் சொல்லுங்கள்.

சுப். அது நியாயந்தான். மீனாட்சி—உம்—ரூபாவதி, அவள் போட்ட நகைகள் யெல்லாம் கொடுத்துவிடு; அவள் கொடுத்தது உனக்கு ஒன்றும் வேண்டியதில்லை.

ரூ. ஆகட்டும். [சரடு தவிர மற்ற நகைகளைக் கழற்றிக் கொடுக்கிறாள்] இந்தச் சரடு மாத்திரம் எனக்கு வேண்டும்.

க. ஏனடி? அது மாத்திரம் என்ன? உனக்கு எந்த மாப்பிள்ளை பண்ணிக்கொடுத்தான்? கழற்றிவை அதையும்!

ரூ. நீதான் சற்று முன்பாகச் சொன்னையே—அந்தக் கிழவி கொண்டு வந்து கொடுத்தாள் என்று.

க. நான் எங்கே சொன்னேன்! பொய் பேசவும் கற்றுக் கொண்டாயா? கொடடி அதை!

[அதை இழுக்கப் பார்க்கிறாள்.]

ரூ. ஐஐயோ! அது கழற்ற முடியாது! கழற்ற முடியாது!

க. கழற்றமுடியாமற் போனால் அறுத்து எடுத்துக் கொள்ளுகிறேன்!

ரூ. ஐயோ வேண்டாம்! வேண்டாம்!

[அதைப் பிடித்துக் கொள்ளுகிறாள்.]

க. சுமங்கலி பாவம்!

[அதைப் பற்றி வலிக்கிறாள். உடனே அதிலிருந்த விசை திறக்க ரவை பச்சை செம்புக்கற்கள் அதிலிருந்து கீழே சிந்துகின்றன.]

சுப். ஓகோ! நினைத்தேன்! கல்யாணி! நில் அங்கே! எதையாவது தொட்டால் அப்படியே சுட்டு விடுவேன்! மீனாட்சி, இதையெல்லாம் ஒன்றும் விடாமற் பொறுக்கு. [ரூபாவதி அப்படியே செய்கிறாள்.] இதில் என்ன காகிதச் சுருள் இந்தப் பக்கம்! [அதை மெல்ல எடுத்துப் பிரித்துப் பார்க்கிறார்] ஓஹோ! அப்படியா சமாசாரம்!—என்ன ஆச்சரியம்!

[அதைப் படித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் கல்யாணி திடீரென்று பாய்ந்து மேஜையின் மீது வைத்திருக்கும் கைத்துப்பாக்கியை எடுத்து அவரைச் சுடுகிறாள். குண்டு தப்புகிறது.]

ரூ. ஆ! ஆ! [கல்யாணி கையினின்றும் அதைப்பிடுங்கப் பார்க்கிறாள்.]

சுப். பத்திரம்! பத்திரம்! இன்னும் அதில் நான்கு குண்டு கள் இருக்கின்றன!

[தானும் பிடுங்கப் பார்க்க, மூவரும் வலிக்கும் சமயத்தில் அகஸ்மாத்தாய் அந்த கைத்துப்பாக்கி வெடித்து, குண்டு பட்டு அதனால் கல்யாணி சாகிறாள். வெளியில் கதவைத் தட்டுகிற சப்தம்; போலீஸ் விசில் கேட்கிறது. கீழே சப்தம்.]

சுப். போலீஸ்காரர்கள் வருகிறார்கள்! [அந்த ரத்தினங்களையும் காகிதச் சுருளையும் சட்டில் போட்டு] இதோ விசை! [திகைத்து நிற்கும் ரூபாவதியைப் பார்த்து] இதோ இதைக் கழுத்தில் போட்டுக்கொள் [அணிந்துவிடுகிறார்] போலீஸ் காரர் கேட்டால் ஒன்றும் வாயைத் திறக்காதே! நான் பார்த்துக்கொள்ளுகிறேன் எல்லாம்!

போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணப் பிள்ளையும்

இரண்டு கான்ஸ்டபில்களும் விரைந்து நுழைகிறார்கள்.

ச. ஆ! ஆ! நினைத்தேன்! சுப்பிரமணிய ஐயர் அவாள்! உங்களைக் கைதி செய்கிறேன். நீங்கள் எதாவது பேசி னால் பிறகு அதை உங்களுக்கு விரோதமாய் உபயோ கிக்கப்படும் என்பதை அறியுங்கள்.

ரூ. ஆ! ஆ! அவர் ஒன்றும் செய்யவில்லையே [அழுகிறாள்.]

ச. அடே! ஒன்று நாலு ஒன்று, ரூபாவதியையும் கைதி செய்.

[ரூபாவதி கதறிக்கொண்டு போய் சுப்பிரமணிய ஐயரைக் கட்டிக் கொள்ளுகிறாள்.]

சுப். சரவணப் பிள்ளையவாள்! எங்களைத் தொட வேண்டாம் நாங்களாக ஸ்டேஷனுக்கு வருகிறோம்!—மீனாட்சி ஒன் றும் பயப்படாதே!

காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம்

முதற் காட்சி

இடம்—அநந்தகிருஷ்ண ஐயர் ஆபிசில் ஓர் அறை.

அநந்தகிருஷ்ண ஐயர் மேஜையருகில் உட்கார்ந்திருக்கிறார்.

மேஜைக்கு அப்புறம் சரவணப்பிள்ளை நின்று கொண்டிருக்கிறார்.

அ. [தன் எதிரிலிருக்கும் கட்டைப் படித்துப்பார்த்து] உம்—என்றைக்காவது ஒரு நாள் இக்கதிக்கு வருவான் என்று நினைத்தபடி ஆயிற்று! சரவணப் பிள்ளை, ஏன் இதை எனக்கு முன்பே தெரிவிக்கவில்லை ?

ச. நேற்று இராத்திரி உங்களுக்குத் தொந்திரவு கொடுக்க எனக்கு இஷ்டமில்லை. காலையில் இரண்டு—கைதிகளிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் ஸ்டேட் மெண்டு வாங்கி, பிறகு உங்களுக்கு ரிபோர்ட்டு செய்வதற்கு இத்தனை நேரம் பிடித்தது.

அ. இன்குவெஸ்ட் (Inquest) எத்தனை மணிக்கு ?

ச. பன்னிரண்டு மணிக்கு வைத்திருக்கிறது, டாக்டர் அப்பொழுது தான் வருவதாகத் தெரிவித்தார்.

அ. சரவணப் பிள்ளை—உமக்கு என்ன தோன்றுகிறது இதைப்பற்றி ?

ச. இரண்டு பெயரையும் தனித்தனியாக விசாரித்தும் கொஞ்சமும் மாறாமல் ஸ்டேட்மெண்டில் எழுதியிருக்கிறபடி தான் கூறுகிறார்கள்.—அவர்கள் சொல்வதை நான் நம்புகிறேன்.

அ. ஆமாம், ஜூரியும், ஜட்ஜும் நம்பவேண்டுமே ! [மேஜையின் மீதிருக்கும் டெலிபோன் மணி அடிக்கிறது] யார் அது ? [குழாயைக் காதில் வைத்து] அல்லோ ! யார்

அது ?—நீயா ! என்ன சமாசாரம் அம்மா ? உம்.—அழகர் கோயிலுக்கா போகவேண்டும் ? பிரார்த்தனை செலுத்தவா ? உம்—அவசியமா போகவேண்டுமென்ருல் போ; நான் வரமுடியாது—உம்–என்ருல் ஆனது பார்க்கிறேன். நம்முடைய காரில்தான் போ—ஷாபர் புதுஆள்—ஜாக்கிரதையாகக் கொண்டுபோகச் சொன்னேன் என்று சொல். —சரிதான்! போ! ஆகட்டும்! ஆகட்டும்! [குழாயை வைத்து விடுகிருர்] சரவணப்பிள்ளை, கைதிகளை அழைத்துவாரும் இங்கே—வேண்டாம் ! — சுப்பிரமணியனை மாத்திரம் அழைத்து வாரும்.

ச. அப்படியே—[வெளியே போய் சுப்பிரமணிய ஐயரை இரண்டு கான்ஸ்டபில்கள் மத்தியில் அழைத்துக் கொண்டு வருகிருர்.]

அ. ஹா ! [அவனை சற்றுப் பார்த்து பெருமூச் செறிந்து] இரண்டு கான்ஸ்டபில்களையும் அறைக்கு வெளியில் இருக்கச் சொல்லுங்கள்.

[கான்ஸ்டபில்கள் போகின்றனர்] பிள்ளை, நீங்களும் கொஞ்சம் வெளியே இருங்கள். நான் மணியடித்தால் வாருங்கள். [சரவணப் பிள்ளை போகிருர்.]

அ. எனடா! என்னை எறெடுத்துப்பார்க்க உனக்கு முகம் இருக்கிறதே என்று ஆச்சரியப்படுகிறேன்.

சுப். அப்படித்தான் நானும் ஆச்சரியப்படுகிறேன்.

அ. இப்படிப்பட்ட பாதகத்திற்கும் இழிவாய் என்று நான் கனவிலும் நினைத்தவனல்ல !

சுப். அப்படித்தான் நானும் நினைக்கிறேன்—உம்மைப்பற்றி.

அ. என்னடா முணுமுணு என்கிருய்? குடியைக்கெடுக்கப் பிறந்த பாபி !

சுப். குடியைக் கெடுக்கப் பிறந்த பாபி நானே, வேறு யாரோ என்று பிறகு யோசிப்போம் ! இப்பொழுது என்னை எதற்காக அழைத்துவரச் சொன்னீர் ?

அ. உன்னை எப்படியாவது தப்பவைக்க ஏதாவது மார்க்கம் இருக்கிறதா என்று கேட்டறியவே உன்னை வரவழைத்தேன்.

சுப். என்னைத் தப்பவைக்க உம்மால் எப்படி முடியும்?

அ. உங்களிருவருடைய ஸ்டேட்மென்டுகளையும் நன்றாய் வாசித்துப் பார்த்தேன். அதில் கூறியிருப்பதெல்லாம் உண்மை யென்றே—நம்புகிறேன்—

சுப். அதுவரையில் சந்தோஷம்,

அ. ஆயினும் ஏதோ விஷயத்தை ஒளித்திருப்பது போல் எனக்குத்தோற்றுகிறது, எல்லா உண்மையையும் அதில் எழுதி யிருக்கிறாயா நீ?—என்ன சும்மா இருக்கிறாய்?

சுப். ஒரு விஷயம் மாத்திரம் அதில் எழுதவில்லை—அதை செஷன்ஸ் கோர்ட்டில் தான் கூறப் போகிறேன்.

அ. நினைத்தேன்—நினைத்தேன். மணி, வேண்டாம், உன் நலத்தைக் கோரியே கேட்கிறேன், என்னிடம் சொல்லிவிடு அதை.

சுப். உம்முடைய நலத்தைக்கோரியே அதைச் சொல்லா திருக்கிறேன். இப்பொழுது என்னைக்கேளாதீர் அதை.

அ. என் நலத்தைக் கோரியா? எனக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? நீ சொல்வது எனக்கு ஒன்றும் புலப்பட வில்லை. மணி—உன்னைக் கடைசி முறைகேட்கிறேன். உன் உயிர்தப்ப வேண்டுமென்று உனக்கு இஷ்டமிருந் தால் அதை என்னிடம் சொல்லிவிடு.

சுப். நான் கடைசி முறை சொல்லுகிறேன். நான் சொல்ல மாட்டேன் அதை இப்பொழுது.

அ. இன்னுமா அந்தப் பிடிவாதம்! ஒரு வேளை கல்யாணி யின் மகள் அவளைச் சுட்டனளா? அவளைக்காப்பாற்றுவ தற்காக அதை ஒளிக்கிறாயா?

சுப். சத்தியமாக அவள் சுடவில்லை.

அ. பின்னை என்ன என்னிடமிருந்து ஒளிக்கிறாய்? மணி, உன்னிடம் வார்த்தையாடிக் கொண்டிருக்கக் காலமில்லை. நான் சொல்வதைக் கேள்; எனக்கு ஒருவழிதான் தோற்றுகிறது உன்னைத் தப்ப வைக்க.

சுப். என்ன அது ?

அ. அந்தப் பெண்தான் சுட்டாள் என்று சொல்லிவிடு, அதற்குத் தகுந்தபடி சாட்சிகளை ஏற்பாடு செய்து விடுகிறேன்; நீ தப்பித்துக்கொள்ளலாம்.

சுப். நிரம்ப சந்தோஷம்! இந்த மாதிரி பொய் சாட்சிகளைத் தயார் செய்வதற்குத்தான் உமக்கு டிஸ்டிரிக்ட் சூபரின்டென்டென்ட் ஆப் போலீஸ் வேலை கொடுத்து கவர்மென்டார் உமக்கு சம்பளம் கொடுக்கிறார்களோ ?

அ. என்ன சொன்னாய்!—அதனப்பிரசங்கி! கெட்டழியக் காலம் கிட்டி விட்டதே! அதுதான் பிதற்றுகிறாய் இப்படி! ஐயோ பாபம், நம்முடைய தங்கையின் மகனாயிற்றே என்று பரிதாபப்பட்டு ஏதோ கூறினால், திரும்பி என்னை இந்தக் கேள்வி கேட்கிறாயா ? நாளைக்கு உன்னைத் தூக்கில் போடும்பொழுது அப்பொழுது தெரியும்!

சுப். அந்த யோசனை உங்களுக்கு வேண்டாம்—என்னைத் தூக்கில் போடமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அ. ஏன்? வீண்மோசம் போகாதே! நீ ஸ்டேட்மென்டில் சொல்லியிருக்கிறதை நாளைக்கு செஷன்ஸ் கோர்ட்டில் ஜூரியும் ஜட்ஜும் நம்பிவிடுவார்கள் எளிதில் என்று நினையாதே!—யார் அடா உனக்கு சாட்சி ?

சுப். சாட்சியா ?—சொக்கலிங்கம்.

அ. அது யாரடா அது ?—இறந்த கிழவியின் வேலைக்காரனா என்ன ?

சுப். இல்லை—பரமேஸ்வரன்.

அ. அடடா! ஏது இந்த புத்தி வந்தது! சுவாமியேது கிமியேது என்று சொல்லிக்கொண்டிருந்தவனுக்கு இப்பொ

மூதாவது இந்த புத்தி வந்ததே! சாகிற காலத்தில் சங்கரா சங்கரா என்றானும்!

சுப். அதெல்லாம் போகட்டும். என்னை ஏதோ காரணமாகத் தான் அழைத்திருக்கிறீர்; என்ன அது என்று சொல்லும் சீக்கிரம்.

அ. முன்பே சொன்னேனே, உன்னைக் காப்பாற்ற வேண்டுமென்றுதான்.

சுப். யார் தடுப்பது உம்மை?

அ. என்னடா அது? மணி, இந்த ஸ்திதிக்கு வந்தும் உன்னுடைய பிடிவாத குணம் போகவில்லையே! [தன் கண்களைத் துடைத்துக்கொண்டு] இது வரையிலே ஏதோ நல்ல பெயரெடுத்து நம்முடைய குடும்பத்தின் பெயரைக் காப்பாற்றி வந்தேன்! நாளைக்கு இவருடைய மருமகன் தான் ஒரு தேவடியாள் சிறுக்கிக்காக அவள் தாயாரைக் கொன்றான்—தூக்கிலிடப் பட்டான் என்று—என்று சொல்லுவார்களே!—அதை என் காதாரக் கேட்டு எப்படிச் சகிப்பேன்! [துக்கப்படுகிறார்.]

சுப். மாமா! துக்கப்படாதீர்கள்—நீங்கள் கூறியதெல்லாம் வாஸ்தவமாய் இருந்தால் நீங்கள் துக்கப்பட வேண்டியது தான். நீங்கள் கூறிய வார்த்தைகளில் நான் உமது மருமகன் என்பது தவிர வேறொன்றும் வாஸ்தவமல்ல—மீனாட்சி—உம்—ரூபாவதி—தேவடியாள் அல்ல.

அ. உனக்குப் பத்தினி! தாசி வயிற்றிலே பிறந்த குட்டி சம்சாரியாகப் போவாளோ?

சுப். அவள் தாசி வயிற்றில் பிறக்கவில்லை.

அ. என்னடா! உனக்கென்ன பயித்தியம் கியத்தியம் பிடித்திருக்கிறதா என்ன? கல்யாணி—தாசியல்லவென்றால்—திரும்பிக்கொண்டு சிரிப்பார்களெல்லோரும்.

சுப். கல்யாணி தாசிதான், ஆனால் ரூபாவதி கல்யாணியின் மகள் அல்ல.

அ. அவள் வளர்த்துக்கொண்ட பெண்ணோ என்ன? ஓகோ! வேறு ஏதாவது கெட்டுப்போன முண்டைக்குப் பிறந்த குழந்தையை எடுத்து வளர்த்தாளா என்ன?

சுப். மாமா! உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். ரூபாவதியின் தாயாருக்கு நீர் இழைத்த பிழைபோதும்—இறந்த பின்னும் அவளை தூஷியாதீர்?

அ. என்னடா! நீ பேசுவது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது! எனக்கொன்றும் அர்த்தமாகவில்லை. நான் என்ன செய்தேன்? அவள் தாயார் யார்? அவளை எனக்கென்ன தெரியும்?

சுப். உமக்கு நன்றாய்த் தெரியும்.

அ. [எழுந்திருந்து] நன்றாய்த்தெரியுமா?—யார் அவள் தாயார்?

சுப். ரூபாவதியை நீர் பார்த்திருக்கிறீரா?

அ. பார்த்ததேயில்லை. உன்னைப்போல் தாசி வீட்டில் நுழைபவன் என்று நினைத்துக் கொண்டாயா என்ன என்னையும்?

சுப். அப்படி நினைக்கவில்லை, அதற்கு மேலாக நினைத்தேன்.

அ. என்ன சொன்னாய்! [அருகிற்சென்று] எனக்கிருக்கிற கோபத்தில் உன்னைக் கைதி என்றும் பாராமல்—

சுப். என்ன செய்வீர் என்று—அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டு அப்புறம் சொல்லும்.

அ. எந்தப் பெண்ணை?

சுப். ரூபாவதியை.

அ. அந்தத் தேவடியாள் நாரியை நான் ஏன் பார்க்க வேண்டும்?

சுப் அவளைப் பார்த்தால் அவளுடைய தாயாரின் ஞாபகம் அப்பொழுதாவது உமக்கு வரும்.

அ. என்னடா இது? ஆச்சரியமாயிருக்கிறது. என்ன விளையாடுகிறாயா என்ன இச்சமயத்தில்?

சுப். இது விளையாட வேண்டிய காலமல்ல—எனக்கு நன்றாய்த் தெரியும். ஒரு கான்ஸ்டபிலை விட்டு உம்முடைய மற்றொரு கைதியை வரவழையும்—உம்முன் !

அ. என்ன இது? [மேஜை அருகிற் சென்று மணி யடிக்கிறார்.]

சரவணப்பிள்ளை விரைந்து வருகிறார்.

ச. என்னாங்க ?

அ. ஒன்றும் விசேஷ மில்லை. இவனை விசாரித்தாயது. அந்த மற்றொரு கைதியையும் அழைத்துவாரும்.

ச. அப்படியே. [போகிறார்.]

அ. மணி ! உன் மனதில் ஏதோ இருக்கிறது, உண்மையைச் சொல்.

சுப். நான் சொல்லவேண்டியதில்லை, உமக்கே தெரியும் சீக்கிரம்.

சரவணப் பிள்ளை, நபாவதியை அழைத்துக்கொண்டு வருகிறார்.

அ. [அவளைப் பார்த்ததும் ஸ்தம்பித்துப் போய்] காமாட்சி !—காமாட்சி ! [விதிர் விதிர்த்து நாற்காலியின் மீது சாய்கிறார்; சற்றுப் பொறுத்தெழுந்து] பிள்ளை—கொஞ்சம் வெளியே போய் இருங்கள். [சரவணப் பிள்ளை வெளியே போகிறார். சுப்பிரமணி ஐயர் இடம் போய்] மணி ! மணி ! நான் கனவு காணவில்லையே ! வாஸ்தவத்தைச் சொல்லடா ! இது யார் இது ? இறந்துபோன காமாட்சியா ?—

சுப். அல்ல—காமாட்சியின் பெண்.

அ. மணி ! எனக்குப் பயித்தியம் பிடிக்கும் போலிருக்கிறது! விரைவில் உண்மையைச் சொல். அந்தக் குழந்தையை கொன்று—அது இறந்து விட்டதாகச் சொன்னாளே அந்த வேலைக்காரி ?

சுப். அது பொய், வாஸ்தவத்தை இதனின்றும் தெரிந்துக் கொள்ளும்.

[ரூபாவதி யருகிற்போய் அவள் கழுத்திலிருக்கும் சரடை விசையைக்கொண்டு கழற்றி அதனின் றும் ரத்தினங்களை மேஜையின்மீது கொட்டு கிருர்.]

அ. ஆ! காணுமற்போனதாகச் சொன்ன ரத்தினங்கள்!

சுப். [அதனின்றும் காகிதச் சுருளை எடுத்து] இதைப் படித்துப் பாரும். எல்லா உண்மையும் வெளியாகும்.

அ. காமாட்சியின் உயில்! [விரைவிற் படித்துப் பார்த்து] பாபி! பாபி! இது வரையில் இந்த உண்மையை அறியாமற் போனேனே!—மணி! இதை யாராவது பார்க்கப்போகி ருர்கள்! இவற்றை யெல்லாம் அந்தச் சரட்டில் போட்டு முன்போல் மூடிவிடு. [சுப்பிரமணிய ஐயர் அப்படியே செய் கிருர்.]

அ. மணி! அந்தக் கிழமுண்டை எங்கே இருக்கிருள்?

சுப். நேற்று காலே இறந்துவிட்டாள். இந்தச் சரட்டின் விசை யின் சூட்சுமம் அகஸ்மாத்தாய் நேற்றிரவு கல்யாணி இதைப் பற்றி இழுத்த பொழுது தான் தெரிந்தது; சற்று முன்பாக—ஒரு விஷயம் மாத்திரம் செஷன்ஸ் கோர்ட்டில் கூறப்போகிறேன் என்றேனே, இதைப் பற்றித்தான்.

அ. மணி! என்னை நீ தூஷித்தது எனக்கு அர்த்தமாகாதிருந் தது. நீ இவ்வுண்மையை அறிந்த விஷயம் எனக்குத் தெரியாது. அப்பா, நீ என்னை தூஷித்தது போதாது! இன்னும் அதிகமாக தூஷித்திருக்கவேண்டும்! ஐயோ! இவ்வளவுக்கும் ஆதிகாரணன் நானல்லவோ? ஈசனே! ஈசனே! என்னை தண்டியும், என் குழந்தையை தண்டி யாதீர்கள் நான் இழைத்த பாபத்திற்காக!—மீனுட்சி! மீனுட்சி! [ரூபாவதி அருகிற் போகிருர்.]

சுப். அவளுக்கு இந்த உண்மை யொன்றும் தெரியாது.

அ. தெரியாதா? நீ சொல்லவில்லையா!?

சுப். இல்லை.

அ. ஆம்.—தெரியாமலிருப்பதும் ஒரு விதத்தில் நலம்தான். சொக்கநாதா! நான் என்ன செய்யப்போகிறேன்! நாளை கோர்ட்டில் இவ்விஷயங்களெல்லாம் வெளி வந்தால் நான் எப்படி இந்த அவமானத்தை யெல்லாம் பொறுப்பேன்? [மேஜையின் பேரில் இருக்கும் டெலிபோன் மணி அடிக்கிறது] யார் அது? [அதன் குழாயைக் காதில் வைத்துக் கேட்கிறார்.] அல்லோ!—ஆம்-நான்தான்—உறக்கப்பேசினால் எனக்கு ஒன்றும் கேட்கவில்லை! கொஞ்சம் மெல்லப் பேசுங்கள். —யார் நீங்கள்? வைகுண்டம் ஐயரா? என்ன சமாசாரம்?—யார் மோடார் வண்டி? என்னுடையதா! உடைந்ததா! எப்படி எப்படி? உயிர் சேதமில்லையே?—என் பெண்ணுக்கா? மண்டையா திறந்து போய்விட்டது? பிராணன்போய் விட்டதா! டாக்டரா சொன்னார்?— இதோ வருகிறேன்!—சொக்கநாதா! [நாற்காலியில் சாய்கிறார்.]

சுப். என்ன மாமா? என்ன சமாசாரம்?

அ. ஈசன் விதித்த தண்டனை! மணி, என் மோடார் வண்டியில் போகும் பொழுது—என்பெண்—வண்டி உடைந்து மடிந்து விட்டாள்!

[தலையைக் கையில் தாழ்த்தித் தேம்பி அழுகிறார்.]

சுப். மாமா! வாஸ்தவமாகவா? யார் தெரிவித்தது?

அ. யூனியன் கிளப் செக்ரெடெரி வைகுண்டம் ஐயர். மணி— என் அருகில்வா. என் மார்பு என்னமோ அடைப்பது போலிருக்கிறது. முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்! வாஸ்தவம்தான். மணி—இன்னும் அருகில் வா—மீனாட்சியை நீ தான் காப்பாற்றவேண்டும்—

சுப். அப்படியே.

அ. பிரமாணம் செய்.

சுப். அப்படியே [கையடித்துக் கொடுக்கிறார்] மாமா, ஒன்றும்

பயப்படாதீர். உம்முடைய பழய மார்பு நோயாயிருக்கலாம்—நான் வயித்தியருக்கு டெலிபோன் பண்ணவா?

அ. வேண்டாம். பிரயோஜனமில்லை—இப்படி இன்னும் அருகில் வா [வர, அவன் காதில் ஏதோ சொல்லுகிறார்.] இது தான் என் கடைசி வேண்டுகோள். அதை மறுக்காதே! மீனாட்சியை என் அருகில் அழை. [சுப்பிரமணிய ஐயர் சைகை செய்ய மீனாட்சி அவர் அருகிற் செல்லுகிறாள்] மீனாட்சி, நீயாவது ஈசன் அருளால் சுகமாய் வாழ்வாயாக! [அவள் கையை எடுத்து சுப்பிரமணிய ஐயர் கையில் வைக்கிறார்.] காமாட்சி—மன்னித்து விட்டாள்—நான் வருகிறேன்! [மரிக்கிறார்.]

மீ. ஐயோ! இது என்ன—உயிர் போய் விட்டாற் போலிருக்கிறதே! யார் இது?

சுப். உன் தகப்பனார்!

சரவணபிள்ளை வேகமாய் வருகிறார்.

ச. என்னுங்க! உங்க மோடார் வண்டி உடைந்து—உங்கப் பெண்— [திகைத்து நிற்கிறார்.]

காட்சி முடிகிறது.

இரண்டாங் காட்சி.

இடம்—தானப்ப முதலியார் வீதியின் பக்கம்.

காலம்—சாயங்காலம்.

தங்கவேலு வாத்தியார், நந்துலால், சுப்பிரமணியப் பிள்ளை, சுந்தரராஜ முதலியார் பேசிக்கொண்டு ஓர் வீட்டினுள்ளிருந்து வெளியே வருகின்றனர்.

த. ஏன் ஐயா, சுப்பிரமணியப் பிள்ளை, வாஸ்தவமாக வேலையிருக்கிறதா, அல்லது ஆட்டம் தோற்றுப்போய் விட்டது என்று எழுந்து விட்டீர்களா?

சுப். தோற்றுப்போனேனு! எங்கிட்டமாத்திரம் அந்த ஆடு தன் ஆஸ் இருந்தா அல்லோ தெரியும்!

சுந். கடைசியிலே ஆடிவந்தது டைமன் ஆச்சே?

சுப் உம், அதான்—டைமன் ஆஸ் இருந்திருக்கணும்.

நந். இவர்—பாரு—நானுதான் இஸ்பேட் ராஜா போட்டு விட்டினேனே?

சுப். அதாம்—துருப்பு ஆஸ் என்கையில் இருந்திருக்கணும்— நாழியாச்சி நான் வர்ரேன்.

த. எங்கே அவ்வளவு அவசரம்—சொல்லுங்கையா?

சுந் வேறெ எங்கேயும் இருக்காது, செஷன்ஸ் கோர்ட்டுக்கா இருக்கும். நேற்று அந்த ரூபாவதியே அங்கே பார்த்தது மொதலு—வேறுகியாபகமே இல்லே அவருக்கு.

த. ஏன் ஐயா, அப்படிதானு?

சுப். இல்லேண்ணு! அந்த கேசு என்னமாமுடியுது இண்ணு பாக்கணும்.

த. அது மாத்திரம் தெரியவோணுமிண்ணு, போக வேண்டிய தில்லே. இதோ நம்ப நடேச ஐயர் அங்கிருந்து தான் வர்ராப்போலே இருக்குது.

நடேச ஐயர் வருகிறார்.

வாங்க நடேச ஐயர்—கோர்ட்டிலிருந்து தானே வர் ரைங்க?

நடே. ஆமாம்.

சுப். ஆ! அந்த ரூபாவதி கேசு என்னமாச்சி?

நடே. சுப்பிரமணிய ஐயர் கேஸ் சொல்ரைகளோ?

நந். அவரு— காபகம்—அவருக்கு!

நடே. ஜட்ஜ் மிஸ்டர் காட்ஸ் பேசிமுடிச்சுட்டாரு; ஜூரி யோசனெ பண்ணப் போயிருக்காங்க ரூமுக்கு—நான் வந்து விட்டேன். ஜனங்க நெருக்கத்துலே இருக்கமுடியலே— எள்ளுபோட்டா எள்ளு விழாது போங்க!

த. எந்தப்பக்கம் இருக்காரு ஜட்ஜ் ?

நடே. கேட்பானே ! பொய்மனுட்டி நைதியாயிருந்தாலே போதும்—அதுவும் ரூபாவதி பெட்டியிலே! போலிஸ் ஜெயம் எங்கே சாயரது ?

நந். என்ன நானும்—இந்த போலிஷ் காரிங்களே—நம்பக் கூடாது.

த. ஐயோ சாமி ! இந்த தமிழ் என்னபாபம் செய்ததோ— மிஸ்டர் பார்பர்வாயிலே ஆப்டுகினு இப்படி கஷ்டப் பட !

நந். பாருங்கசார் ! அந்த பேச்சி—சொல்கொடாது—இன்னு சொல்லலே நானு?

சுந். அதென்ன வாத்தியார், அப்படி கூப்பிடிரங்களே அவரே ?

த. அவரையே கேட்டுப் பாருங்க சொல்லுவார்.

நந். இல்லேசார்—நீ—கேளுசார் ! ஒருநாளு, இவர் சிபாரிஷ் பண்ணுரு இன்னு, ஒரு வைக்கல்காரன் ஆபிசுக்கு போயி—ஒரு பிரமாண பத்திரிகே—எல்தச்சொன்ன—அதிலே நானு நன்ன எல்திக்கொடுத்தே-ஆமில்டன் கம்பெனி—, என் வேலேபேரு இண்ணு இங்கிலிஸ்லே சொன்ன—, அந்த வைக்கல் காரன் என்ன எல்தூட்டா—தமுழ்லே அம்பட்டன் கம்பெனி இண்ணு ! அந்த கேசு எனக்கு விரோதமாயிப் போயி சென்னப் பட்டணத்துக்கு—அப்பீல்லே போன—அங்கே இங்கிலிஸ்லே—தர்ஜமா—பண்ணுமா—அங்கே ஒரு பயித்தக்காரன் அத்தெ பார்பர் கம்பெனி இன்னு தர்ஜமா பண்ணி, அச்சிபோட்டான்சார் —அது மொதலு வாத்தியார் என்னே சத்தாய்க்கிறார் சார் ! இது நாயமாசார்—நீ சொள்ளு !

த. அது போன போவுது—இன்னும் பொழுது இருக்குதே—இன்னம் ரெண்டாட்டம் போடலாமே.

சுந். உள்ளே காற்று ஒடுக்கமாயிருக்கிறது.

த. வெளியே ஜமக்காளத்தைக் கொண்டு வந்து போட்டாற் போச்சுது, நமக்குத்தான் தெருத்திண்ணைக்கிளப் இண்ணுபேர் வைச்சியிருக்காரே ரங்கநாத முதலியார்—அடே! முருகேசம்!

முருகேசம் வருகிறான்.

மு. ஏன்?

ஸ்ரீனிவாசுலு நாயுடு மிகவும் விரைவாக வருகிறார்.

ஸ்ரீ. உட்டேட்டாங்க! உட்டேட்டாங்க!

த என்ன ஐயா அது டப்பூஸ் நாயுடு! சமாசாரம் என்ன?—ஏன் இப்படி இரைக்கிறது?

ஸ்ரீ. அங்கிருந்து ஓடிவந்தேன்! சொஞ்சம் தாகத்துக்குக் கொண்டுவரச் சொல்லுங்க—

த. அடே! முருகேசம் கொஞ்சம் காபிகொண்டாடா.

மு இப்போதான் போட்டிருக்குது.

ஸ்ரீ. முன்னே கொஞ்சம் வெந்நீர்கொண்டா—அப்புறம் காபி வரட்டும்.

[முருகேசன் உள்ளே போகிறான்.]

த. நீங்கசொன்னது ஒன்றும் தெரியலே—என்ன சமாசாரம்?

ஸ்ரீ. ரெண்டு பெயரையும் உட்டேட்டாங்க!

எல்லோரும். ஆ ஆ! அப்படியா? எப்படி? எப்படி?

ஸ்ரீ. கொஞ்சம் பொறுங்க—தாகத்துக்கு சாப்பிட்டு விட்டு சொல்றேன், எல்லாத்தையும்.

முருகேசன் ஒரு பெரிய செம்பில் வெந்நீர்

கொண்டு வருகிறான்.

த. அடே பயா! என்னடா அது இதுலே கொண்டாந்தையே?

மு. இல்லே எசமான், சின்ன லோட்டாவில் கொண்டு வந்தால் அவரு ரெண்டு மூணு தரம் கேப்பாரு.

ஸ்ரீ. [அதை சாப்பிட்டு செம்பை முருகேசன் கையில் கொடுக்க அவன் போகிறான்] அப்பாடா!—இண்ணைக்கி காலமே யெல்லாம் அந்த வெங்கடராமையர், அந்த சுப்பிரமணிய ஐயர் பேர்லே என்ன விரோதமோ—என்னமோ தெரியலே—தன்னாலே ஆன முட்டும் பேசிப் பார்த்தார்—ரெண்டுமணி நேரம் சம்அப் பண்ணார்!

த. அவர் பேர்லே விரோதமில்லே, ரூபாவதி பேர்லே—விரோதம் இருக்கும்.

ஸ்ரீ. நாங்கல்லாரு நினேச்சோம் எப்படியும் ஜுரிகுற்றம் தான் இண்ணு சொல்லுவாங்க இண்ணு.

முருகேசம் ஒரு பெரிய டம்ளரில் காபிகொண்டுவருகிறான்.

கொண்டாடாப்பா இப்படி. [அதைவாங்கி சாப்பிட்டு விட்டு] இப்பொதான் கொஞ்சம் சவுதாரிக்குது,—அங்கேயிருந்து ஓடிவந்த வேகத்துலே மூச்சுதெணரிப்போச்சி!

த. அதுவும் டப்பூஸ் நாயுடு!

ஸ்ரீ. என்னங்க! வாத்தியார் எல்லாம் உங்களால் தான் என் தொப்பை யெல்லாம் வாடிபோச்சுதுங்க.

த. இன்னும் கொஞ்சம் வாடட்டும்—அப்புறம் நடந்ததெ சொல்லுங்க.

ஸ்ரீ. அப்புறம்—ஜட்ஜமாத்திரப்—என்னெண்ணாலும் ஒழுங்காதான் எடுத்துச் சொன்னாரு ஜூரிக்கு—நியாயமா!—இருந்தாலும் எங்களுக் கெல்லாம் சந்தேகம் தான், ஜுரிங்க தாங்கயோசனே பண்ணனும் இண்ணு ரூமுக்குள்ளே போய் உக்காந்துகினுங்க—

நடே. அதுவரைக்கும் நானிருந்தேன், அப்புறம்?

ஸ்ரீ. ஜூரி சீக்கிரம் வருவாங்க இண்ணுபார்த்தா—வல்லே!—நேரமாக ஆக—எங்களுக்கெல்லாம் சந்தேகமா போச்சு!—அல்லாரும் அந்த கதவையே பாத்துகினு இருந்தோம்.

அப்போ, அந்த யானை காலிலே இருந்து காப்பாத்தனாரே சுப்பிரமணிய ஐயரு—அந்த குழந்தையின் தகப்பனார்—பொறுக்கமுடியாமே, மீனாட்சி சுந்தரேசா! என் குழந்தையின் உயிரே காப்பாத்தினவரு உயிரெ நீதான் காப்பாத்தணும் இண்ணுசொல்லி அழுதுட்டாரு பாவம்! பக்கத்திலே இருந்த எங்களுக்கெல்லாம் கூட அழெவந்தூட்டுது! [தன் கண்ணைத்துடைத்துக் கொண்டு] யார் அப்பா அது, முருகேசம்! இன்னும் கொஞ்சம்—நீங்கல்லாம் தாகத்துக்கு சாப்பிட்டாச்சோ?

சுந். நாங்கல்லாம் அப்பவே டீ சாப்பிட்டோம்.

ஸ்ரீ. தேத்தண்ணியா? வாத்தியார் வீட்லே அது ரொம்ப நண்ணாயிருக்குமே!—முருகேசம், அது ஒரு டம்ளர் கொண்டாடாப்பா பாக்கலாம்.

த. கொண்டுவா போ. [முருகேசன் போகிறான்.]

ஸ்ரீ. அப்புறம் கடைசியிலே—கதவெதிறந்துகினு வந்தாங்க! கோர்ட் முழுதும் நிசப்தமா போச்சி! ஒரு குண்டூசி விழுந்திருந்தா சப்தம் கேட்டிருக்கும்! ஜட்ஜ் கேட்டார் உங்க அபிப்பிராயம் என்ன இண்ணு, குற்றமல்லா இண்ணு சொன்னவுடனே, கோர்ட்டு முழுதும் ஒரு கூச்சல் கிளம்பிச்சி பாருங்க!—கொண்டாடா அப்பா, இப்படி [முருகேசம் தேத்தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறான், அதைச் சாப்பிட்டு விட்டு] நண்ணா இருக்குதுங்க! முருகேசத்துக்கு ஒரு பிரைஸ் கொடுக்கணுங்க—

சுந். சமாசாரத்தை சொல்லி முடியுங்கையா.

ஸ்ரீ. அப்புறம் அந்தக்கூச்சலே அடக்க ஜட்ஜாலேயும் முடியலே—அஞ்சிநிமிஷம் ஒரேகூச்சல்தான்! கூச்சல்போடுகிறவங்களே யெல்லாம் கோர்ட்டுக்கு வெளியே அனுப்பிச்சுடு இண்ணு வழக்கமாசொல்ர ஜட்ஜ்கூட இண்ணைக்கு சும்மா இருந்தூட்டார். அப்புறம் ஜட்ஜ் என்னமோ ஜூரிகளுக்குச் சொன்னாரு—எங்களுக்கு யாருக்கும் கேக்கலே அது ஒண்ணும். ஜூரிங்களே கூண்டிலே

இருந்து உட்டுட்டாங்க—மறுபடியும் ஒரே கூச்சல் தான்!

சுப். அப்புறம் ?

ஸ்ரீ. அப்புறம் என்ன ! ஜட்ஜ் எழுந்து பூட்டாரு, நாங்கல்லா வந்தூட்டோம்.—ஆ ஆ! சொல்லமறந்து போனேனே ! ஜட்ஜ் போகும் போது சுப்பிரமணிய ஐயருக்கு ஷேக் ஹாண்ட்கொடுத்துட்டு போனாரு.

சுப். ரூபாவதிக்கு கொடுக்கலேயோ ?

ஸ்ரீ. அதே நான் கவனிக்கலே. என்னாகும்பல் நெருக்கம்!

த. குற்றவாளி அல்லவென்று சொன்னவுடன் சுப்பிரமணிய ஐயர் என்ன செய்தாரு—கவனிச்சைங்களா நாயுடு ?

ஸ்ரீ. நான் தான் பெட்டியின் கிட்டவரிசையிலே இருந்தேனே ! ஒண்ணும் செய்யலே—என்னமோ தலேயேகுனிஞ்சிகினு மொண மொண இண்ணுகினு இருந்தாரு கண்ணே மூடிகினு.

சுப். ரூபாவதி ?

ஸ்ரீ. ரூபாவதி மாத்திரம் அவர்காலில் விழுந்து கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அழுது விட்டாள் !

சுப். பாவம்' ஏன் அழுதாள்?

த. [நகைத்து] ஏன் அழுதாளா—எம்பிரம்மம் ! நானு விசாரிச்சி சொல்ரேன்.

சுப். அப்புறம் அவுங்கரெண்டுபேரும் எங்கே போனாங்க ?

ஸ்ரீ. அது எனக்குத்தெரியாது. ஜட்ஜ் ஷேக்ஹாண்ட் பண்ணவே, எல்லாரும் ஷேக்ஹாண்ட் பண்ண ஆரம்பிச்சாங்கோ அவருக்கு! அப்புறம் கும்பலெ விலக்கி அவங்களே கார் அண்டை கொண்டுபோய் விடரத்துக்கு பத்து பன்னிரண்டு கான்ஸ்டபில்களாலே கூட சமாளிக்கமுடியலே. கொஞ்சம்வழி உண்டான உடனே, நான்பிடிச்சேன் ஓட்டம் இவ்விடத்திற்கு.

த. நாயுடு—நீங்க ஓடும்போது நான்பாத்ததே இல்லே. கொஞ்சம் ஓடிக்காட்டுங்களேன் இப்போ.

ஸ்ரீ. அப்பப்பா! அதெல்லாம் முடியாது என்னாலே! அப்பா, அந்த எளப்பு இன்னும் வாங்கலே எனக்கு!

முருகேசன் மறுபடிவருகிறான்.

த. என்னடா அது?

மு. அப்புறம் சாப்பிடரேன் இண்ணுவைச்சி வைக்கச் சொன்னீங்களே—கோக்கோ.

த. வேண்டான்டா, நிம்முண்ணு இருக்குது. எடுத்தும் போ—அடடே! கொண்டா இப்படி, நம்பநாயுடுக்கு கொடு அதை.

மு. [அவர்காதில்] என்னாங்க! அப்புறம் அவர் வயிறுவெடிச்சிப்பூடுங்க.

த. சத்! அதனப்பிரசங்கி!—நாயுடு, இதோ கோக்கோ கொஞ்சம் சாப்பிட்டுப்பாக்கரைங்களா?

ஸ்ரீ. கோக்கோவா? கொஞ்சம் கொடுங்க. [வாங்கி கடகட வென்று சாப்பிட்டு விடுகிறார்.]

நந். இப்டி சாப்டுதான் நாயுடு எல்சிபூடராரு!

[எல்லோரும் நகைக்கிறார்கள்.]

ஸ்ரீ. இல்லீங்க—நந்துலால்—முன்னே போலே சாப்பிடமுடியரதில்லெ—பாதிகொறைச்சி வுட்டேன் இப்போ.

சுப். வாத்தியார் நான்வர்ரேன்—நாயுடுகாரு, சுப்பிரமணிய ஐயர் வீடு எங்கே தெரியுமோ உங்களுக்கு?

ஸ்ரீ. கூட்ஸ்ஷெட் வீதி—54 வது நெம்பர் வீடு.

சுப். நான் விசாரிச்சிக்கரேன்.

த. சரியாகேளுங்க—கூட்ஸ்ஷெட் வீதி, தப்பா கேட்டா—எவனாவது கொடுக்கப் போரான்.

சுப். இல்லே! இல்லே—நான் வருகிறேன்.

த. சரி—நாளைக்கு நாலுமணிக்கு—சரியாக—

சுப். ஆம் ஆம். [போகிறார்.]

நந். வாத்தியார்—நம்போ—ஊட்டிக்கி போரேன்.

த. ஊட்டியிலே இப்ப என்ன ஐயா வேலே? இப்பொழுது எது ரெயில்?

நந். என்னசார்—எழுத்தாணி பண்ரைங்க! ரெயில் அலா சார், ஊட்டுக்கு போரேன்.

த. வீட்டுக்கா!—போய்வாருங்கள், போய்வாருங்கள்!
[நந்துலால் போகிறார்,

ஸ்ரீனிவாசுலு நாயுடு முதலிய மற்றவர்களெல்லாம்
விடைபெற்றுக் கொள்ளுகின்றனர்]

ஸ்ரீ. நான் வரட்டுமா—வாத்தியார்.

த. செய்யுங்க—நாளைக்கு வாரைங்களோ இல்லேயோ?

ஸ்ரீ. அதுக்கென்ன—ஆ—நம்பவீட்லே கொஞ்சம் சோடா இருக்குமோ?

த. சோடாவுக்கென்ன குறைச்சல்—அடே முருகேசம்.

முருகேசம் வருகிறான்.

மு. எசமான்.

த. உள்ளே போய் ஒரு சோடாபுட்டி கொண்டாடா.

மு. யாருக்கு எசமான்?

த. அடே! அதனப்பிரசங்கி!

மு. இல்லே எசமான், சின்னபுட்டிகொண்டுவரவா, அல்லது பெரியபுட்டி கொண்டுவரவா என்று கேட்டேன்.

ஸ்ரீ. பெரியபுட்டி தான் கொண்டாடாப்பா.
[முருகேசம தஙகவேலு வாத்தியார் காதில் எதோ சொல்லுகிறான்.]

த. போடா அதனப்பிரசங்கி! [முருகேசம் உள்ளே போகிறான்.]

ஸ்ரீ. என்ன சொன்னானுங்க பையன்?

த. அதென்னதுக்கு உங்களுக்கு—சின்ன பையன்! விளையாடரான்.

ஸ்ரீ. என்ன தான் சொன்னான் சொல்லுங்களேன். முன்னே கூட என்னமோ சொன்னான்.

த. வெறொண்ணுமில்லே, உங்கவயறு வெடிச்சி பூடும் இன்னான்.

முருகேசம் ஒரு பெரிய சோடா புட்டியைக் கொண்டுவருகிறான்.

ஸ்ரீ. அடே அப்பா! முருகேசம்! அதெல்லாம் வயறு வெடிக்காது பயப்படாதே! நான் தான் மிதமாசாப்பிடரேனே. [சாப்பிட்டு விட்டு சோடா புட்டியைக் கொடுத்துவிடுகிறார்.]

மு. எசமானே அம்மா கூப்பிடராக உள்ளே.

த. என்னையா? இதோ வர்ரேன்—வர்ரீங்களா டப்பூஸ் நாயுடு?

ஸ்ரீ. வர்ரனுங்க. [தங்கவேலு வாத்தியார் உள்ளே போகிறார். ஸ்ரீனிவாசலு நாயுடு மெல்ல நடக்க அவரைப்போல் அபிநயித்து அவர்பின்னால் முருகேசம் நடந்து வருகிறான், ஸ்ரீனிவாசலு நாயுடு திரும்பிப் பார்த்து] என்னடாப்பா பின்னாலேவர்ரே?

மு. இல்லே—கொஞ்சம் நீர் மோர் சாப்பிடரைங்களா இண்ணுகேக்க! [சொல்லிவிட்டு வீட்டிற்குள் ஓடிப்போகிறான்.]

காட்சி முடிகிறது.

மூன்றாம் அங்கம்

முதற் காட்சி

இடம்:—சென்னபட்டணத்தில் எழும்பூரில் 'மீனாட்சி நிலயம்'

என்னும் பங்களாவில் ஓர் அறை.

நுபாவதி ஒரு பக்கமாகக் கட்டிலில் படுத்திருக்கிறாள்.

மற்றொரு பக்கம் சுப்பம்மாள், லேடி நாராயணசாமி ஐயருடன்

மெல்ல பேசிக்கொண்டிருக்கிறாள்.

லே-நா. பிழைக்காது—என்று சொல்லி விட்டார் வயித்தியர்?

சு-அ. ஆம், அப்படித்தான் தெரிவித்தார். இனி பிழைத்தால் மறு ஜனனம் என்று சொன்னார்! [துக்கப்படுகிறாள்.]

லே-நா. ஸ்வாமி இருக்கிறார்—துக்கப்படாதீர்கள்—நாம் என்ன செய்யலாம்? எல்லாம் ஒரு நாள் போக வேண்டியவர்கள் தானே, அவர் பாதத்திற்கு!

சு-அ. ஆம் ஆம், ஆயினும் இவ்வளவு சிறு வயதில்!—இரண்டு வருஷங்களாக, சுப்பிரமணிய ஐயர் இச்சபை ஸ்தாபித்தது முதல்-என் பெண்ணைப்போலவே வளர்த்து வந்தேன். இதில் இருக்கும் எல்லாப் பெண்களைவிட இவள்தான் மிகுந்த அடக்கம் ஒடுக்கம் உடையவள்—என் வார்த்தைக்கு குறுக்காக—ஒரு சொல் சொல்லமாட்டாள்! [துக்கிக்கிறாள்.]

லே-நா. அம்மா, துக்கப்படாதீர்கள்—எனக்கென்னவோ--இவள் எப்படியும் பிழைப்பாள்—என்று ஏதோ தோன்றுகிறது—ஈஸ்வரன் கருணையினால்.

சு-அ. எப்படியாவது—உங்கள் வாக்கு பலித்து—பிழைத்தாற் போதும்!

லே-நா. எப்படி—இந்த ஜ்வரம் வந்தது இவளுக்கு?

சு-அ. எனக்கென்ன தெரியும்? வயித்தியர் இந்த பங்களா கட்டி முடிந்ததும் சுண்ணும்பு ஈரம் ஆறுததன் முன் இங்கு வந்ததினுல் வந்திருக்கலாம்—ஒரு வேளை என்று ஊகிக்கிருர்.

லே-நா. கட்டடம் மிகவும் நன்ருயிருக்கிறது. பெரிதாகவுமிருக்கிறது. எத்தனை பெயர் இருக்கலாம் இதில்?

சு-அ. நூற்றிருபது பெண்களுக்கு இடம் உண்டு.

லே-நா. இப்பொழுது எத்தனை பெண்கள் இருக்கிருர்கள்?

சு-அ. கடைசியில் போனமாசம் தாங்கள் தயை வைத்து அழைத்துக் கொண்டு வந்து விட்ட கோமுட்டிப் பெண்ணுடன் அறுபத்து நான்கு பெயர்கள் இருக்கின்றனர்.

ஸ்ரீ. அத்தான்!—அத்தான்!

லே-நா. யாரையோ அழைக்கிருள் போலிருக்கிறதே?

சு-அ. இல்லை! வாய் பிதற்றுகிருள்—புத்தி மாருட்டம்!

ஸ்ரீ. அத்தான்—வருவாரா?

லே-நா. யாரை அத்தான் என்று அழைக்கிருள்?

சு-அ. சுப்பிரமணிய ஐயரை—அத்தை மகன் முறையாக வேண்டுமே இல்லையோ?

லே-நா. ஆம் ஆம், தெரியும்—தெரியும்.

ஸ்ரீ. வரமாட்டார்—வரமாட்டார்!

சு-அ. எந்நேரமும்—அவர் கியாபகம் தான்! மாருட்டத்தில்கூட!

லே-நா. அவர் எங்கே? காசி யாத்திரை போயிருப்பதாகச் சொன்னுர்களே?

சு-அ. ஆம், காசியிலிருந்து வந்து இப்பொழுது ராமேஸ்வரத்திற்குப் போயிருக்கிருர் மறுபடியும்—கங்கா ஜலத்தை—ராமலிங்கத்திற்குச் சமர்ப்பிக்க—

லே-நா. அவருக்குத் தெரிவித்தீர்களா?

சு-அ. வயித்தியர்—நேற்றே தந்தி கொடுத்தார். அவரும் உடனே புறப்பட்டு வருவதாக பதில் கொடுத்திருக்கிருர்

—இப்பொழுதிய றெயிலில் வரவேண்டும்—உம்! இனி வந்தென்ன பயன்?

ரூ· அம்மா! அம்மா!

லே-நா. உங்களைக் கூப்பிடுகிறாற் போலிருக்கிறது.

சு-அ. [அருகிற்போய்] ரூபாவதி, என்ன வேணும்?

ரூ· அத்தான்! [புராளுகிறாள்.]

சு-அ. ரூபாவதி, இதோ பார்—லேடி. நாராயணசாமி ஐயர்—உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்.

ரூ. அத்தானா?—வரமாட்டார்—வரமாட்டார்· அம்மா! அந்த காகிதத்தை படியுங்கள்—படியுங்களேன்—இன்னொரு தரம்—இன்னொருதரம் கேக்கரனே—நான் செத்துபோரத்துக்கு முன்னே!

லே-நா. எந்த காகிதத்தைக் கேட்கிறாள்?

சு-அ. சுப்பிரமணிய ஐயர் எழுதிய கடிதத்தை·

ரூ· ஆம்! ஆம்! படியுங்கள்—படியுங்கள்!

லே-நா. அவள் இஷ்டப்படித் தான் படியுங்களேன்?

சு-அ. இன்று காலை முதல்—பத்து தரம் படித்தாயிற்று—புத்தி மாறாட்டம்!

ரூ. இன்னும் ஒரு தரம்—ஒரே தரம்!—

லே.நா இன்னும் ஒரு தரம் தான் படித்து விடுங்கள்—தயவு செய்து—அந்த வார்த்தையைக் கேட்க என் மனம் தாளவில்லை.

சு-அ. ரூபாவதி, இதோ கடைசி தரம் படிக்கிறேன் கேள்—பிறகு என்னைத் தொந்திரவு செய்யாதே· [படிக்கிறாள்.] "மீனாட்சி நிலையம் சுபரின்டென்டென்ட், மாது ஸ்ரீ சுப்பம்மாள் அவர்களுக்கு—மீனாட்சி சுந்தரேசன் கருணையினால் இவ்விடம் க்ஷேமம்—

ரூ· மீனாட்சி! மீனாட்சி—நான்தானே!

சு-அ· பார்த்தீர்களா—மாறாட்டம்!

ரு. படியுங்கள்—படியுங்கள்.

சு-அ. [படிக்கிறாள்.] "அவ்விடத்திலும் அப்படியே இருக்கு மென்று நம்புகிறேன். மீனாட்சி நிலையத்தில் அறுபத்து நான்காவது பெண் சேர்க்கப்பட்டதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். என்பாபவிமோசன காலமும் நெருங்கிவிட்ட தென்று நினைக்கிறேன்—இங்கே ராமலிங் கத்திற்கு முறைப்படி கங்காஜல அபிஷேகம் நிறை வேற் றினேன். நாளை புறப்பட்டு மதுரைக்குப்போய் மீனாட்சி தெரிசினம் செய்து கொண்டு பட்டணம் வரலாமென்றி ருக்கிறேன்—ருக்மணியைக் கலியாணம் செய்து கொள்ள தனக்கு இஷ்டமிருப்பதாக வக்கீல் கோபால கிருஷ்ண முதலியார் எழுதியிருக்கிறார். ருக்மணியின் இஷ்டமெப் படியோ அதை மெல்ல அறிந்து எனக்கு எழுதுங் கள்"—

ரு. எனக்கெப்பொழுது கலியாணம்?—ஏன் அம்மா?—வாத் தியகாரரே நண்ணு டமடம இண்ணு வாசிக்கச்சொல்லுங் கள்! அப்படி செய்யாதனாலே தான்—எங்கம்மா வித வையாபோனாளாம்—ஐஐயோ! இங்கே கூடவந்து விட் டான் பாபி! கோவிந்தக்கோனான்!—அம்மா அம்மா! என் னைத் தொந்திரவு செய்யாதீர்கள்! உன்வயிற்றிலே பிறந்த குழந்தையாயிருந்தால்—என்னை இப்படி நிர்ப்பந்திப்பா யா?—அத்தான்! அத்தான்—அதோவர்ராங்க!

லே-நா. சிவ சிவ! என்னால் சகிக்கமுடிய வில்லை—சுப்பம்மாள், நான் வருகிறேன்—பரமசிவத்தின் கருணை இவளைக்கா ப்பாற்றுமாக!

[விரைந்து வெளியே போகிறார்கள்.]

ரு. அதோ! வந்தூட்டாங்க!

சு-அ. ஆமாம், ருபாவதி நீ தூங்குகொஞ்சம்.

ரு. தூக்கம் வரவில்லையே!

நர்ஸ் வருகிருள்.

நர். அம்மா—நான் வரலாமோ? ஏழுமணியாச்சுது. வயித்தியர் உத்திரவுபடி ஜுரம் எவ்வளவு இருக்கிறதென்று பார்க்கவேண்டும்.

சு-அ. செய்யம்மா.

நர். [ஜுரம் பார்க்கும் கருவியைவாயில் வைத்துப்பார்த்து.] உம்—

சு-அ. நம்முடைய கடனை நாம் ஒழிப்போம்.—பரமேஸ்வரா! பரமேஸ்வரா!—எப்படி யிருக்கிறது?

நர். [தலையசைத்து] சாயங்கால மிருந்ததற்கு ஒருபுள்ளி குறைவாயிருக்கிறது. என்ன பிரயோஜனம்?

சு-அ. ஈசனே! ஈசனே!

திடீரென்று கதவைத்திறந்து கொண்டு
சுப்பிரமணிய ஐயர் வருகிருர்.

ஆ! வந்தீர்களா! வந்தீர்களா! இப்பொழுதாவது வந்தீர்களே!—புத்திமாருட்டத்திலும் உங்கள் ஞாபகம் தான்!

சு. எப்படி யிருக்கிறது இப்பொழுது?

சு-அ. வயித்தியர் இனிபிழைக்காது என்று சொல்லி விட்டார்! [அழுகிருள்.]

சுப். அம்மா! பொறுத்துக் கொள்ளுங்கள்! அவர் விட்ட வழி! நாம் என்ன செய்யலாம்! நர்ஸ், ஜுரம் எப்படி யிருக்கிறது?

நர். சாயங்காலம் இருந்தபடி தான்—ஒரு புள்ளி ஏதோ குறைவாயிருக்கிறது.

ரூ. அத்தான்! அத்தான்!

சுப். யாரைக் கூப்பிடுகிருள்?

சு-அ. உங்களைத்தான்—என்று நினைக்கிறேன்.

சுப். [அவள் அருகிற்போய்] ரூபாவதி! இதோவந்தேன்

ரூ. அத்தானை வரச்சொல்லுங்கள்.

சுப். இதோ—நான் வந்திருக்கிறேனே.

ரூ. நீங்களல்லா! என் அத்தான் ராமேஸ்வரத்துக்குப் போறாரே அவரெவரச் சொல்லுங்கள்.

சுப். ரூபாவதி—என்னை உனக்குத்தெரியவில்லையா ?

ரூ. அத்தான் வந்தால்—நான் பிழைத்துக்கொள்வேன். ஆனா—அவர்வரமாட்டார்.

சுப். ரூபாவதி, இதோ நான் வந்திருக்கிறேனே ?

ரூ. நீங்க—பொய் பேசரைங்க—அவர் வரமட்டார். முண்டைபெற்ற பெண்ணை அவர்—பார்க்க வரமாட்டார். அதுக்குத்தான் யாத்திரை பூட்டார்—பார்த்தால்கஷ்டம் இண்ணு.

சுப். மீனாட்சி! மீனாட்சி! [கண்ணீர் விடுகிறார்.]

ரூ யார் என்னைக் கூப்பிட்டது?

[தலையைத் தூக்கிப்பார்க்கிறாள்.]

சுப். நான் தான்! [சரேலென்று எழுந்து தன் பெட்டியை திறந்து அதிலிருந்து ஒரு பொட்டளத்தை எடுத்துப் பிரித்து.]
மீனாட்சி! இதை அணிந்துகொள்!

ரூ. யார் நீங்கள் ?

சுப் நான் தான்—உன் அத்தான்.

ரூ. [அவர் கையைப்பிடித்து] நிஜமாகவா ?

சுப். இதோ மதுரை மீனாட்சி கோயில் குங்குமம். அணிந்துகொள்.

ரூ. நீங்க—இட்டுடுங்க—

சுப். மீனாட்சி! மீனாட்சி! [இடுகிறார்.]

ரூ. அத்தான்—அன்றைக்கு என் அப்பா செத்து போகிறத்துக்கு முன்னே உங்கள் காதிலே என்ன சொன்னார் ?

சுப். அப்பறம் சொல்லுகிறேன். இப்பொழுது கொஞ்சம் தூங்கு—சரியாகத் தூக்கம் வந்தால்—உனக்கு சுவஸ்தமாகும் என்று வயித்தியர் சொன்னார்.

ஸ்ரீ· அத்தெ சொல்லி விடுங்கள்—தூங்குகிறேன்·

சுப். [காதில் ஏதோ மெல்ல சொல்லுகிருர்] தூங்கு கொஞ்சம் பார்ப்போம்,

ஸ்ரீ. நிஜமாகவா ?

சுப். ஆம்.

ஸ்ரீ அப்படியே செய்வீர்களா ?

சுப்· ஆகட்டும். முன்பு மீனாட்சியின் கருணையினால் உனக்கு உடம்பு சுவஸ்தமாகட்டும்.

ஸ்ரீ. சந்தோஷம்· நான் தூங்குகிறேன்—என்கையை விடாதீர்கள். [மெல்ல உறங்குகிருள்.]

நர். [வெளியில் மோடார் வண்டிசப்தம் கேட்டு] வயித்தியர் வண்டி! [வெளியே போகிருள்.]

சு-அ. ஐயோ! இன்றைக்கு வந்தவர்—நேற்று வந்திருக்கக் கூடாதா !

சுப். உஸ்! [கையால் மௌனமாயிருக்கும் படி சைகைசெய்கிருர்.] கதவைத்திறந்து கொண்டு டாக்டர் குமாரசாமி முதலியார் மெல்ல நர்சுடன் வருகிருர்.

கு. கொஞ்சம் கூட குறையவில்லையா ?

நர். ஒரு புள்ளி குறைந்திருந்தது—அவ்வளவுதான்.

கு. எப்பொழுது பார்த்தாய் ?

நர். இப்பொழுது தான் பார்த்தேன். ஐந்து நிமிஷங்கூட இராது.

சுப். ஸ் ! [கையால் சைகை செய்கிருர்.]

கு. தூங்குகிருளா?--அம்மட்டும்'—சுவாசமும் சரியாக வருகிறது!—[மெல்ல கையைப் பிடித்துப் பார்த்து] என்ன! நன்றாய் வியர்க்கிறதே! ஜுரம் கட்டாயமாய் இரங்கி யிருக்க வேண்டும்! நர்ஸ், ஜுரம் குறையவில்லை என்று சொன்னையே!

நர். சற்று முன்பாகத் தான் பார்த்தேன்—நன்றாய் வியர்க்கிறதே இப்பொழுது'—துடைக்கவா ?

கு. உம்—வேண்டாம் இப்பொழுது. நித்திரையைக் கலைக்காதே' காற்று படாதபடி போர்த்திவை—இன்னும் நன்றாய் வியர்த்தால் மிகவும் நல்லது, பிறகு துடைக்கலாம். [நர்ஸ் அப்படியே செய்கிறாள்.] என்ன ஆச்சரியம்! சுப்பிரமணிய ஐயர்—நான் வாஸ்தவமாகச் சொல்லுகிறேன், இப்படித்திரும்பும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

சுப். பிழைப்பாளா?

கு. பிழைக்கலாம்—என்று தோற்றுகிற தெனக்கு.

சு-அ. ஐயரவாள் வந்ததனால் தான் திரும்பியது! இரண்டு நாட்களாகத் தூங்காதவள் இப்பொழுதுதான் தூங்குகிறாள்.

சுப். இதென்ன பயித்தியம்! என்னால் என்ன இருக்கிறது?

கு. ஈஸ்வரன் கருணை யென்றே சொல்லவேண்டும்! இந்த ஜுரத்தில் மாறாட்டத்திற்கு வந்த பிறகு ஆயிரத்திலொன்று பிழைத்ததில்லை என் அனுபவத்தில்.

சு-அ. என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள் வயித்தியர்!

கு. இதற்குள் சந்தோஷப்பட்டு விடாதீர்கள்—கண்டம் தப்பியது என்று நினைக்கிறேன்—ஆயினும் இன்னும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

நர். அதிகமாய் வியர்த்திருக்கிறது, நான் துடைக்கவா?

கு. மெல்லதுடை—நித்திரையைக் கலைக்காமல் [நர்ஸ் மறைவு பலகையை எடுத்து குறுக்காக வைத்துவிட்டுத் துடைக்கிறாள்.]

சுப். [குமாரசாமி முதலியாரை ஒரு பக்கம் அழைத்துக் கொண்டுபோய்] டாக்டர், நீங்கள் இத்தனை நாளாக மிகவும் சிரமப் பட்டதாகக் கேள்விப்பட்டேன். உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்!

கு. ஐயரவாள், என் மனதிலிருப்பதைச் சொல்லவா, உண்மையாக? அவள் கண்டம் தப்பியது உங்களால்—என்று

உறுதியாய் நம்புகிறேன்—என் மருந்தினால் அல்ல. நாங்கள் வயித்தியர்கள், புஸ்தகங்களிலிருந்து கற்பதைவிட, புஸ்தகங்களிலில்லாத விஷயங்கள் அநேகம் கற்க வேண்டியவர்களா யிருக்கிறோம்—நாளை காலைக்குள் அதிக குணமாகும் என்று தோற்றுகிறது. நாளை காலை வருகிறேன்—நீங்கள் இவ்விடமே இருந்து பார்த்துக்கொள்ளுங்கள்.

சுப். என்ன டாக்டர்! என்னை இரவெல்லாம் இங்கேயா இருக்க வா சொல்லுகிறீர்கள் ? இரவு எட்டானால் இந்தக்கட்டடத்திற்குள் ஒரு ஆடவனுமிருக்கலாகாது, வேலைக்காரர்கள் உட்பட, என்று நிபந்தனை ஆச்சுதே.

கு. ஆம், அந்த நிபந்தனை நீர்தான் ஏற்படுத்தினீர் என்று எனக்குத் தெரியும்—ஆயினும்—

சுப். என்ன டாக்டர்—நான் ஏற்படுத்திய நிபந்தனையை நானே மீறலாமா?

கு. நீர் எதற்காக ஏற்படுத்தினீர் என்பதை அறிவேன்—ஆயினும் அதை யெல்லாம் இப்பொழுது பார்த்தால் முடியாது. அவள் பிழைக்கவேண்டுமென்றால் என்சொற்படி நடவும்—வயித்தியர் கட்டளைப்படி நீங்கள் நடக்கவேண்டியது உங்கள் கடமை. குறுக்கே ஒன்றும் பேசாதீர். சுப்பம்மாள், இப்படி வாருங்கள். நீங்களும், ஐயரவாளும் இன்றிரவெல்லாம் ஜாக்கிரதையாகப் பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்ளுங்கள்.

சு-அ. அப்படியே! வேறென்ன வேலை எனக்கு? எப்படியாவது அவள் பிழைத்தாற் போதும்.

கு. ஐயரவாளையும் இருக்கச் சொல்லி யிருக்கிறேன்.

சுப். சந்தோஷம்.

கு. அத்தான் எங்கே?

நர். [வெளியில் வந்து] உங்களைக் கூப்பிடுகிறாள்—துடைத்தாயிற்று. [மறைவு பலகையை எடுத்து ஒரு புறமாய் வைத்து விடுகிறாள்.]

ரு. அத்தான்?

சுப். இதோ, மீனாட்சி! [போய் அருகில் உட்காருகிறார்]

கு. நான் சொன்னதற்கு ஆட்சேபனை செய்தீர்களே! பார்த்தீர்களா?

ரு. மறுபடி போகமாட்டீர்களே?

சுப். இல்லை—இல்லை! நீ கொஞ்சம் நன்றாய்த் தூங்கு—பார்க்கலாம்.

ரு. உம்—என் கையைப் பிடித்துக்கொள்ளுங்கள்—தூங்குகிறேன்.

சுப். [அப்படியே செய்து] இனி பேசாது தூங்கு.

கு. நான் சொன்னது சரியாய்ப் போச்சுதா? நான் வருகிறேன். அந்த இடத்தை விட்டெழுந்திருக்காதீர்—நர்ஸ், தானாக எழுந்திருந்தாலொழிய நித்திரையைக் கலைக்க வேண்டாம்.

நர். மருந்து கொடுக்கக்கூடாதா?

கு. மருந்துகிருந்து ஒன்றும் வேண்டாம் இன்றிரவு முழுவதும—தானாக எழுந்து தாகத்திற்கு வேண்டுமென்று கேட்டால் சோடா கொடு—வேறொன்றும் வேண்டாம்—நீ போய் சீக்கிரம் சாப்பிட்டு விட்டு வந்து, ஒரு புறமாகப் படுத்துக் கொள்—காலை வருகிறேன்.

[மெல்ல போகிறார்.]

காட்சி முடிகிறது.

நான்காம் அங்கம்

முதற் காட்சி.

இடம்:—மீனாட்சி நிலயத்தில் ஓர் அறை.

சுப்பிரமணிய ஐயரும் சுப்பம்மாளும் வருகிறார்கள்.

சுப். இதை மீனாட்சிக்குத் தெரிவித்தீர்களா ?

சு-அ. நேற்றே தெரிவித்தோம்.

சுப். எங்கே மீனாட்சி ?

சு-அ. வழக்கப்படி கோயிலுக்குப் போயிருப்பாள்—சீக்கிரம் வந்து விடுவாள்.

சுப். இதைத் தெரிவித்த பொழுது—என்ன சொன்னாள்—மீனாட்சி ?

சு-அ. அப்படியே என்னைக் கட்டிக் கொண்டாள் சந்தோஷத்தால்—பிறகு ஏதோ அவள் முகத்தில் கொஞ்சம் வருத்தம் தோன்ற— என்ன அம்மா சமாசாரம் என்று கேட்டேன்—அதற்கு என் தாயார் தகப்பனார் இல்லையே என்னை விவாகம் செய்து கொடுக்க—என்று துக்கப் பட்டாள்.

சுப். அப்புறம் ?

சு-அ. உடனே அருகிலிருந்த சர் நாராயண சாமி ஐயரும் லேடி நாராயண சாமி ஐயரும், நீ அதற்காக வருத்தப் படாதே அம்மா, நாங்களிருந்து உன்னை தத்தம் செய்து தருகிறோம்—யார் என்ன சொன்ன போதிலும்—என்று தேற்றினார்கள்.

சுப். ஆம்—ஆம்—அந்த விஷயம் நான் யோசிக்க வில்லை—இதுவரையில்—அம்மா—இந்த விவாஹம் உமக்கு மனப் பூர்வமாக சம்மதம் தானா ?

சு-அ. அதென்ன இப்படி கேட்கிறீர்கள் ஐயரவாள் ? நேற்று காலை கமிடி சபை கூடியபொழுது உங்கள் கடிதத்தை

நான் வாசித்ததும், இருந்தவர்களெல்லாம், ஒருவர் பாக்கியின்றி என்ன சந்தோஷப் பட்டார்கள்! நீங்கள் உங்கள் ஆஸ்தியில் பெரும் பாகம் விற்று இக்கட்டடத்தைக் கட்டி, இந்த தர்மத்திற்காக ஒரு லட்சரூபாய் பண்டாக ஏற்படுத்தியதற்காகக் கூட நாங்கள் அவ்வளவு சந்தோஷப் படவில்லை, புத்தியில்லாத சாதாரண ஜனங்களின் அவதூறையும் கருதாது இந்த சமாஜத்தின் பெண்களுள் ஒருத்தியைக் கலியாணஞ் செய்து கொள்ளமுன் வந்த தற்காக அவ்வளவு சந்தோஷப் பட்டோம்!

சுப். இல்லை—ஏதோ நான் என் சுயநன்மையை நாடி—இதைச் செய்ததாக ஜனங்கள் கூறுவார்களோ என்னமோ என்று யோசிக்கிறேன்.

சு-அ. பாமர ஜனங்கள் பல வாறு கூறட்டும்—அதனால் உமக்கென்ன? படித்தவர்கள் ஒருவரும் அவ்வாறு கூறமாட்டார்கள். இதை இகழ்ந்து பேசும் ஒருவனாவது இந்த தர்மத்திற் காவது அல்லது எந்த தர்மத்திற் காவது அரைக்காசு கொடுக்கின்றானா பாரும்.

சுப். இல்லை—அம்மா—கற்றறிந்தவர்களில்கூட பெரும்பாலர் இதை சரியென ஒப்புக்கொள்ள வில்லையென்று நினைக்க வேண்டிய வனாயிருக்கிறேன். நேற்றைத்தினம் சாயங்காலம் என்னுடைய பந்துக்கள் டாக்டர் ஸ்ரீனிவாச ஐயரும் கிருஷ்ணசாமிஐயரும் என் வீட்டிற்கு வந்து என்னை தூஷித்துவிட்டுப் போனார்கள்; நான் மீனாட்சியைக்கலியாணம் செய்து கொண்டால் என்னை ஜாதிப் பிரஷ்டம் செய்வதாகச் சொல்லிப் போனார்கள்.

சு-அ. அவர்கள் ஏன் அப்படிச் சொன்னார்கள் என்று எனக்கு நன்றாய்த் தெரியும்! அவர்கள் ஒவ்வொரு வருக்கும் வீட்டில் விவாஹமாக வேண்டிய பெண்ணிருக்கிறது; இதை எப்படியாவது தடுத்தால் தங்கள் பெண்ணை உங்கள் தலையில் கட்டலாமென்று, இரண்டு வருஷங்களாக அவர்கள் பிரயத்தனப்பட்டது எனக்குத் தெரியாதா?

என்னிடமே எத்தனை முறை அவர்கள் இவ்விஷயத்தைப் பற்றி பிரஸ்தாபம் செய்திருக்கிறார்கள் தெரியுமா ?

சுப். என்ன உலகம் ! என்ன உலகம்'—கடைசியில் போகும் பொழுது கிருஷ்ணசாமி ஐயர் ஒரு வார்த்தை சொன்னார் —அது தான் என்மனம்தாளவில்லை இன்னும்.

சு அ என்ன சொன்னார் ?

சுப். வேணுமென்றால் அவளை--வைப்பாட்டியாக—வைத்துக் கொள்ளேன், விதவையின் பெண்ணை விவாகம் செய்து கொள்ளுகிறாயா ! என்றார்.—ஒரு பாபமுமறியாத பெண்ணை வைப்பாட்டியாக வைத்துக் கொண்டால் பாப மில்லையாம், வேத விதிப்படி விவாகம் செய்து கொண் டால் பாபமாம்!—என்ன உலகம் !

சு-அ இந்தப்பாழும் உலகம் எதை வேண்டுமென்றாலும் பிதற் றட்டும் ! இதைப்படைத்த பரமேஸ்வரன் அறிவார் நீர் செய்வது பாபமல்ல பெரும்புண்ணியம் என்று! இந்த அவதூறுகளினின்றும் உம்மைக் காப்பாற்றுவார்—இதற் கெல்லாம் ஒன்றும் அஞ்சாதீர்கள்.

சுப். நான் அஞ்சவில்லை—மீனாட்சியின் சுபாவம் மிகவும் கூச்ச முடையது—அவள் இதையெல்லாம் கேட்பாளாயின் மிகவும் வருத்தப்படுவாள்—ஆகவே அவளிடம் இதை யெல்லாம் ஒன்றும் சொல்லாதீர்கள்

சு-அ. ஆம், நீர் கூறுவது உண்மை தான், நான் சொல்ல வில்லை.

சுப் ஏன் இன்னும் வரவில்லை மீனாட்சி ?

சு-அ. நான் போய்ப் பார்த்து வருகிறேன் ?

[போகிறாள்.]

சுப். கலியாணமானவுடன் எங்கேயாவது தூரதேசத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்—கொஞ்சகாலம் வசிக்க வேண்டும், இங்கிருந்தால் என்னமாவது பேசிக்கொண்டி ருப்பார்கள்—அது ஏதாவது அவள் காதில் பட்டால்—

சுப்பம்மாள் திரும்பி வருகிறாள்.

சு-அ. இன்னும் மீனாட்சி திரும்பிவர வில்லை. அவள் அறையில் போய்ப் பார்க்க—அங்கே இக்கடிதம் வைத்திருந்தது மேஜையின் பேரில்—உமது மேல்விலாசம் எழுதியிருக்கிறது.—என்னவென்று பிரித்துப் பாரும்—சீக்கிரம்.

சுப். ஆம், ஆம்! எனக்குத்தான்! [விரைவில் பிரித்துப்படித்து] ஆ! என்ன இது? [உள்ளிருக்கும் வேறொரு கடிதத்தைப்படித்துப்பார்த்து] கிருஷ்ணசாமி ஐயர்!—நான் சந்தேகித்தபடியே ஆயிற்று!

சு-அ. என்ன ஐயரவாள்? என்ன சமாசாரம்? சீக்கிரம் சொல்லும்! என் [illegible] எழுதியிருக்கிறாள்? என்னை மன்னியும் கேட்பதற்காக.

சுப் எங்கேயோ போய் விட்டாள் மீனாட்சி! இப்பாழும் உலகத்தின் அவதூறுக்கஞ்சி! எங்கே போயிருப்பாள்? தனியாக!—ஐயோ! அவள்கதி என்னவாவது?

[துக்கப்படுகிறார்.]

சு-அ. ஐயரவாள்! துக்கப்படாதீர்கள்! தயவு செய்து என்ன எழுதியிருக்கிறாள்—வாசியுங்கள்—நான் கேட்கக்கூடுமாயின்—

சுப். [கஷ்டத்துடன் வாசிக்கிறார்] 'தேவரீர் அத்தான் அவர்களுக்கு—இது தான் நான் உங்களுக்கு எழுதும் முதல் கடிதம்—இது தான் கடைசி கடிதமும்; நான் செய்யத் துணிந்ததற்காக என்மீது கோபியாதீர்கள்! இக்கடிதத்தையும் இதில் அடங்கியிருக்கும் கடிதத்தையும் முற்றிலும் படித்துப் பார்ப்பீராயின்—என்மீது பரிதாபப்படுவீர்களேயன்றி கோபங்கொள்ளமாட்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள், என்னை விவாகஞ் செய்து கொள்வீர்களாயின், உங்கள் பந்து எழுதியிருக்கிறபடி—உங்கள் பந்துக்களெல்லாம் உம்மை நீக்கிவைப்பார்கள்—உலகத்தாரும் 'உம்மை இகழ்வார்கள்! என்னை எவ்வளவு இகழ்ந்தாலும் நான் பொறுப்பேன், தர்ம ஸ்வரூபியா

கிய உங்களை இகழ்ந்தால் அதைக்கேட்டு நான் சகியேன்! நீங்களே எனக்குப் பலதரம் சொல்லியிருக்கிறீர்கள், ஒருவர்மீது காதல் உண்மையிற் கொண்டால், அதற்கு அறிகுறி—சுயநன்மையை நாடாது காதல் கொண்டவரின் நலத்தையே நாடுதலேயாம் என்று, ஆகவே என் கடமை உம்முடைய சுகத்தையும் க்ஷேமத்தையுமே என்றும் நாடவேண்டியது! நீர் எனது கற்பைக் காத்தீர்—நான் உமது நற்பெயர் உலக நிந்தனைக்கும் அவதூறுக்கும் உட்படா படிகாத்திடல் வேண்டும்—அதன் பொருட்டே இது செய்யத்துணிந்தேன்! என்னை மன்னித்து, மறந்து, உமது அந்தஸ்துக்கேற்ற—தக்க பெண்மணியை மணந்து, சுகமாய்—நீடூழிகாலம் வாழும். தா முன் ஜன்மத்திற் பாப மிழைத்து இந்தப் பெண் ஜன்மம் எடுத்தேன்—இதைத்துலைத்து இன்னொரு ஜன்மத்திலாவது உம்மைக் கணவனாகப் பெற—மீனாட்சி தேவியின் பொற்றாமரையைப் போய்ச் சேர்கிறேன். என் முதலும் கடைசியுமான—

[கடிதங்களை நழுகவிட்டு நாற்காலியில் வீழ்ந்து கண்ணீர்விடுகிறார்.]

சு-அ. ஐயோ! எந்தப் பாபி அவளுக்கு அப்படி எழுதியது?

சுப். என் பந்து—கிருஷ்ணசாமி ஐயர்—நீங்களே படித்துப் பாருங்கள்.

சு-அ. [அதை விரைவில் படித்துப் பார்த்து] பாபி! பாபி! எப்படியடா உனக்கு இவ்வாறு எழுதத் துணிந்தது! ஒரு உத்தமப் பெண்ணின் சுகத்தையும் உயிரையும் அழித்தாயே—உன் பெண் சுகமாய் வாழ்வாளா!—

சுப். அம்மா! அப்படிச் சொல்லாதீர்கள்! நமக்கு வேண்டாம் அப்பழி!—உடனே நாம் மீனாட்சியைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும்! ஐயோ! இப்பெரிய பட்டணத்தில் எங்கென்று தேடுவது! எங்கே போயிருப்பாள்?

சு-அ. எங்கே போயிருப்பாள்! இந்தப் பாபி எழுதியதற் கஞ்சி

எங்கேயாவது—குளம் குட்டையில் போய் விழப் போயிருப்பாள்!

சுப். ஆம், ஆம்! கொடும் அக்கடிதத்தை. [அதில் கடைசி வரிகளை மறுபடியும் வாசித்து] ஆம்! ஆம்! சந்தேகமில்லை என்ன மணி? [கை கெடியாரத்தைப் பார்த்து] ஐயோ! மதுரை றெயில் போய் விட்டிருக்கும்! யாரடா அங்கே? [கதவருகிற்போய்] கூப்பிடு என் மோடார் வண்டியை! சீக்கிரம்!

சு-அ. எங்கே போகிறீர்கள்?

சுப். அம்மா! இப்பொழுது ஒன்றும் என்னைக் கேளாதீர்கள். எங்களிருவரையும் சீக்கிரம் உயிருடனாவது காண்பீர்! அல்லது பிணங்களாகவாவது காண்பீர்! [வெளியில் மோடார் சப்தம்] நான் வருகிறேன்'— மீனாட்சி! மீனாட்சி!

[விரைந்து போகிறார்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்:—மதுரைக் கோயிலில் பொற்றாமரைக் குளம்.

காலம்:—அர்த்த ஜாமம்.

ரூபாவதி விரைந்து வருகிறாள்.

ரூ. இங்கொருவரு மில்லை, எல்லோரும் போய் விட்டார்கள்! இது தான் நமக்கு நல்லசமயம். இனி தாமதிக்கலாகாது. இந்தக்கடிதத்தை இக்கல்லின்மீது வைத்தால் எப்படியும் இதை அவர் பார்க்கும்படி நேரிடும். [படிக்கட்டில் ஒன்றின்மீது ஒரு காகிதத்தை வைத்து விட்டு கீழே விரைந்து இழிகிறாள்.] மீனாட்சி! மீனாட்சி!

சுப்பிரமணிய ஐயர் விரைந்து வருகிறார்.

சுப். மீனாட்சி! மீனாட்சி! [அவள் கரத்தைப் பற்றித் தடுக்கிறார்.]

ஸ்ரீ. யார் அது?—ஐயோ! அத்தான்!

சுப். கண்ணே! மீனாட்சி! இதைச் செய்ய உன் மனம் துணிந்ததே!

ஸ்ரீ. அத்தான்!—என்மீது கோபியாதீர்கள்—நான் எழுதிய கடிதத்தைப் பார்த்தீர்களா?

சுப். பார்த்தபடியினால் தான்—இங்கு வந்து உன்னைத் தடுத்தேன்.

ஸ்ரீ. எப்படி வந்தீர்கள்? றெயில் இல்லையே!

சுப். மோடார் வண்டியில் வந்தேன்.

ஸ்ரீ. சென்ன பட்டணத்திலிருந்தா?

சுப். ஆம்.

ஸ்ரீ. ஐயோ! உங்களுக்கு நான் என்ன கஷ்டம் கொடுக்கிறேன்!—அத்தான், நான் அந்தக் கடிதத்தில் எழுதியதைப் படித்த பிறகும் நீங்கள் என்னைத் தடுக்கலாமா?

சுப். அந்தக் கடிதத்தில் நீ எழுதியதைப் படித்ததனால் தான்—உன்னைத் தடுக்கிறேன்.

ஸ்ரீ. ஐயோ! என் மன நிலைமை உங்களுக்குத் தெரியாது, உங்களுடைய நன்மையை நாடியே இது செய்யத்துணிந்தேன். என் வேண்டுகோளை மறுக்காதீர்! என்னைத் தடுக்காதீர்!

சுப். என்ன உன் வேண்டுகோள்? இக்குளத்தில் வீழ்ந்து இறக்க வேண்டுமென்பது தானே?

ஸ்ரீ. [மெல்ல] ஆம்.

சுப். வா ஆனால் [அவள் கையைப் பற்றி] நாமிருவரும் ஒன்றாய் விழுந்து மரிப்போம்.

ஸ்ரீ [அவரைத் தடுத்து] ஐயோ! இது என்ன? நீங்கள் ஏன் இறக்க வேண்டும்?

சுப். காரணத்தைச் சொல்லவேண்டுமோ?

ரு. சொல்லும்.

சுப். நான் ஒரு பெண்ணின் மீது சத்தியமாகக் காதல் கொண்டிருக்கிறேன், அவள் என் நலத்தைக் கோராது தன்சுய நலத்தையே கோரி, தன் உயிரை மாய்த்துக்கொள்ளப் போகிறாள்—அப்படிச் செய்வாளாயின் அதைக் கண்டு தரியேன்—அவள் மரித்த பின் அவள் முகத்தைப் பார்ப்பதைவிட அவளுக்கு முன் நான் இறப்பதே தகுதி என்று தீர்மானித்தேன்.

ரு அத்தான்! அத்தான்!—என்னை மன்னியும்!—இங்கு யாராவது நம்மைப் பார்த்துவிடப் போகிறார்கள்.

சுப். இங்கு ஜன சந்தடி யில்லை. அர்த்த ஜாமவேளை நெருங்கி விட்டது—அப்படி யாராவது வந்தாலும் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிக்கொள்வார்கள். வா இப்படி—இக்கல்லின்மீது உட்காருவோம். [இருவரும் உட்காருகிறார்கள்] நான் சொல்வதைச்சற்று நிதானமாய்க் கேள்—பிறகு நீ செய்யத் துணிந்தது சரி யென்று தோன்றுமாயின் எனக்குக் கொஞ்சம் உத்தரவு கொடு.

ரு. எதற்காக?

சுப் நான் முன்பு சொன்னது தவறு—உன்னுடன் கூட இறக்க எனக்கிஷ்டமில்லை—எப்படி யிருக்குமோ? ஆகவே எனக்கு முன்பு உத்திரவு கொடு—நான் மரிக்கிறேன் முன்பு—பிறகு உன் இஷ்டப்படிச் செய்.

ரு அத்தான்! உமக்கு மனம் துணிந்ததே இவ்வார்த்தைகளைச் சொல்ல! நீர் மரிக்க நான் பார்த்து சகிப்பேனா?

சுப் கண்ணே! உனக்கு மாத்திரம் மனம் துணிந்ததே இவ்வாறு செய்யத் துணிய! நான் வந்து தடுத்திராது—நீ இக்குளத்தில் வீழ்ந்து இறந்திருப்பாயாயின், என் கதி என்னவாகும் என்று கொஞ்சமேனும் யோசித்தாயா? நாளை காலை உன் உடல் இங்கு மிதக்க, யாராவது கண்ட

வர்கள் அதைக் கரையில் கொண்டு வந்து போட்டு, இன்னாரென்னக் கண்டறிந்து பட்டணத்திற்கு எனக்கு தந்தி கொடுக்க, நான் ரெயிலேறி சாவகாசமாய் வந்து, தண்ணீரில் கிடந்ததனால் விகாரமாய் மாறிப்போன உன் உடலையும் முகத்தையும் கண்டு நான் என்ன துயரப் படுவேன்!—என்ன கதறி அழுவேன்!—பொறுக்கமுடியாது—என்னிருதயம் என்ன தத்தளிக்கும்' என்பதைக் கொஞ்சமாவது கருதினையா—மீனாட்சி! மீனாட்சி! உன் நன்மையை நாடினையே ஒழிய—என் நலத்தைக் கருதினையா கொஞ்சமாவது ?

ஶ்ரீ அத்தான்! அத்தான்! இதையெல்லாம் நான் கொஞ்சமாவது நினைத்தவளல்ல! மன்னியும்! மன்னியுமென்னை! நான் செய்யத்துணிந்தது தவறு தான். என்மீது கோபியாதீர்கள் [நான்கு புறம் சுற்றிப்பார்த்து] ஒருவருமில்லை! [முத்தமிடுகிறாள்.]

சுப். இது என்ன முதலும் கடைசியுமா ?

ஶ்ரீ. முதல் தான்!—

சுப். முதல் தானா—ஆனால் அதற்கு வட்டி ?

ஶ்ரீ பிறகு—அத்தான், உங்களை ஒன்றுவேண்டிக் கொள்ளுகிறேன். இரண்டு தினங்களாக நடந்த விஷயங்களைப் பற்றி நீங்கள் எப்பொழுதும் ஒன்றும் பேச்சு எடுக்கக் கூடாது, எனக்கு நினைப்பூட்டவும் கூடாது.

சுப். அப்படியே ஆகட்டும்—ஒன்று மாத்திரம் கேட்கிறேன்—உன் உத்தரவின்மீது—இக்கடிதத்தில் என்ன எழுதி வைத்திருக்கிறாய் என்று அதை மாத்திரம் படித்துப்பார்த்து விடுகிறேன்—[அக்கடிதத்தை எடுக்கிறார்.]

ஶ்ரீ. நான் சொல்லிவிடுகிறேன்—இந்த வெளிச்சத்தில் நீங்கள் படிப்பது கஷ்டம். என் மீதிலிருக்கும் நகைகளையெல்லாம் விற்று சென்னபட்டணத்தில் நீங்கள் ஏற்படுத்தியிருக்கும் சமாஜத்திற்குக் கொடுத்து விடும்படியாக எழுதியிருக்கிறேன்.

சுப். மீனாட்சி! உன் நற்குணத்தை மெச்சினேன்—உம்—இப்பொழுதும் அப்படியே செய்து விடவா?

ஸ்ரீ தாராளமாய்ச் செய்யுங்கள்! நானே கேட்கலாமென்றிருந்தேன்.

சுப். பிறகு—நீ என்ன செய்வாய்—ஒரு பொருளுமில்லாமல்?

ஸ்ரீ எனக்கு வேண்டிய பொருள் மீனாட்சி கொடுத்திருக்கிறாள்.

சுப். எங்கே?

ஸ்ரீ [அவரை முத்தமிட்டு] இதோ!—போங்கள் அத்தான்! எப்பொழுது பார்த்தாலும் என்னையே—உம்—உம்!

சுப். இல்லை, இல்லை—கோபித்துக் கொள்ளாதே; வட்டியுடன் எல்லாக்கடனையும் பிறகு கொடுத்து விடுகிறேன். மீனாட்சி, வா போவோம், நம் இருவரையும் பெரும் பழியினின்றும் காப்பாற்றி ஒருங்குசேர்த்த மீனாட்சியைப்போய்க் கும்பிடலாம் முதலில்

ஸ்ரீ ஆம், ஆம்.

சுப் முதலில்—கைகால்களைச் சுத்தி செய்து கொள்வோம்—கையைப் பிடித்துக் கொள்—படி வழுக்கப் போகிறது [இறங்கி கைகால்கள் சுத்தம் செய்து கொள்கின்றனர்] மீனாட்சி, உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன், முகத்தில் ஒன்றுமில்லாமல் எப்பொழுதும் இருக்கலாகாதென்று?

ஸ்ரீ ஆம்! ஆம்! தவறுதான் இப்பொழுது நான் குங்குமத்திற் கெங்கு போவது?

சுப் உன்னைப்போல்—புத்தியற்றவனல்ல நான்—இதோபார் குங்குமம் [இடுப்பிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து] உன்னை மீனாட்சி கோயிலில் போய்த்தேடிப் பார்த்த பொழுது அகஸ் மாத்தாய் பட்டர் ஒருவர் இதைக் கொடுத்தார். மீனாட்சியின் பிரசாதம் என்று அதை அப்படியே மடித்து வைத்தேன்.

ஸ்ரீ. சந்தேகமென்ன—மீனாட்சி தேவியின் பிரசாதம் தான்—கொடுமிப்படி.

சுப். சிச்சி—அதை உனக்குக் கொடுக்கக் கூடாது—இந்தா. [குங்கு மத்தை அவள் நெற்றியில் இடுகிருர்.]

ஸ்ரீ அதிருக்கட்டும்—என்னை மாத்திரம் கேட்டீரே—உங்கள் நெற்றியில் ஒன்றும் காணுமே.

சுப். ஆ! அதை மறந்தேன்—நேற்று காலைபுசித்தது.

ஸ்ரீ. ஆ. ஆ! அத்தான், இதை ஏன் முன்னமே என்னிடம் கூறவில்லை! ஐயோ! உங்களுக்கு நான் எவ்வளவு கஷ்டம் வைத்தேன்! அது முதல் ஆகாரமில்லாமல்—ஒரே விசை யாகவாவந்தீர்?

சுப். ஆகாரம் கொள்ள நேரமேது? இருந்தாலும் நான் உன்னை உயிருடன்காணுமளவும் புசிப்பதில்லை என்று பிரமாணம் செய்து கொண்டேன்—ஆகவே சுப்பம்மாள் ஏதோ வண்டியில் வைத்த பலஹாரத்தைக்கூட வண்டிக் காரனுக்குக் கொடுத்து விட்டேன்.

ஸ்ரீ. அத்தான்! அத்தான்! உங்களுக்கு நான் என்ன கைம் மாறு செய்யப் போகிறேன் இதற்கெல்லாம்?

சுப். இனி என்னை விவாகம் செய்து கொண்டு எப்பொழு தும் பிரியாதிருப்பது தான்.

ஸ்ரீ. அப்படியே ஆகட்டும்.

சுப். ஆனல் சத்தியம் செய்து கொடு.

ஸ்ரீ. ஆகட்டும்—உம்—உம்—இந்த — செய்யமாட்டேன்— அதோ அர்த்த ஜாமபூஜைக்காக மணியடிக்க ஆரம்பிக் கிருர்கள்; கோயிலுக்குப் போய் நம்மைக்காத்து ரட்சித்த மீனாட்சி தேவியின் சந்நிதியில் சத்தியம் செய்து கொடுக் கிறேன்—வாரும்—முகத்தில் நீங்கள் மாத்திரம் ஒன்று மில்லாமலிருக்கலாமோ?—இதோகொடும் அந்தக் குங்கு மத்தை—நான் இட்டுவிடுகிறேன்--[அப்படியே செய்கிருள்.]

சுப் கண்ணே! கண்ணே!

[இருவரும் கோயிலுக்குப் போகின்றனர்.]

காட்சி முடிகிறது.

ஐந்தாம் அங்கம்

முதற் காட்சி.

இடம்—மீனாட்சி நிலயத்தின் பெரிய கூடம்.

ஆடவர்களும் ஸ்திரீகளும் நிறைந்திருக்கின்றனர். ஒருபுறம் சர் நாராயணசாமி ஐயர், லேடி நாராயணசாமி ஐயர், சுப்பம்மாள், முதலியவர்கள் உட்கார்ந்திருக்கின்றனர் மற்றொருபுறமாக, தங்கவேலு வாத்தியார், நந்துலால், சுந்தரராஜ முதலியார், ஸ்ரீனிவாசுலு நாயுடு முதலியோர் உட்கார்ந்திருக்கின்றனர்.

ஸ்ரீ. வாத்தியார், பலஹார மெல்லாம் கடைசியில் தானோ ?

த. ஆமாம், அவர்களுக்குத் தெரியும், முன்னால் கொடுத்து விட்டால், நாம் எல்லோரும் போய் விடுவோம் என்று.

சு. இதோவர்ரேன் [சுந்தரராஜ முதலியார் வெளியே போகிறார்.]

ந எங்கே ! எங்கே போறீ ஐயா ?

த. அவரைச் சும்மா விட்டுவிடுங்கள்—

ஸ்ரீ. வரமாட்டாரா என்ன ?

த. உங்களுக்கொருதரம் சொல்லவேண்டும்!—பொடிக்காகப் போயிருக்கிறார்—வந்துவிடுவார்.

ஸ்ரீ. ஓமப் பொடி இப்பவே கொடுக்கிறார்களா என்ன ?

த சரிதான்!—ஓமப்பொடி அல்ல ஐயா, மூக்குத்தூள்.—

ஸ்ரீ. அதை இங்கேயே போட்டுக்கொள்ளக் கூடாதோ ?

த. எல்லாம் உங்களுக்குச் சொல்லவேண்டும் ! என் எதிரில் போடக்கூடாது என்று ஒரு ஏற்பாடு வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ. உங்களுக்கு அவர் பொடிபோடுவது தெரியாதா என்ன?

த. தெரியும்' ஆயினும் அதை நான் தெரிந்ததாகக் கண்டு கொள்வதில்லை.

ந. ஆனா—நானு—கூடே பொயிவர்ரேன். [போகிறார்.]

த. சரிதான் இவரும்கூட சேர்ந்தாரா என்ன ?

ஸ்ரீ. [சுற்றிப் பார்த்து] என்ன! நம்முடைய ஊர் கிருஷ்ணசாமி ஐயர் கூடவந்திருக்கிறார் போலிருக்கிறதே! அவரும் இந்தச் சபையைச் சேர்ந்திருக்கிறாரா என்ன ?

த. ஆமாம்! அவருடைய மகள் இச்சபையாரால் காப்பாற்றப்பட்டது முதல் இந்தச் சபையில் அவருக்கு மிகவும் ஊக்கமுண்டாய்விட்டது.

ஸ்ரீ. முன்பு சுப்பிரமணிய ஐயரைக் கண்டபடி திட்டிக்கொண்டிருந்தாரே?

த. அதெல்லாம்மாறி விட்டது. அவருடைய பெண்ணை சுப்பிரமணிய ஐயருடைய தாயாதி தானே கட்டிக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ. மீனாட்சியைக் கலியாணம் செய்து கொண்டதற்காக சுப்பிரமணிய ஐயரையும் அந்தக் கலியாணத்திற்குப் போனவர்களையும் சாதிப்பிரஷ்டம் பண்ணிவிட்டேன் என்று கூச்சல் போட்டுக்கொண்டிருந்தாரே?

த. அதெல்லாம் அப்பொழுது, இப்பொழுது வேறுபாடம்! —பட்டால் தான் தெரிகிறது ஒவ்வொருவருக்கும்!

[நந்துலாலும் சுந்தரராஜ முதலியாரும் திரும்பி வருகிறார்கள்.]

த. நந்துலால், நீங்கள் எங்கே ஐயா போய்வந்தைங்க அவ்வளவு அவசரமா? புதுஷாப் ஏதாவது ஏற்பாடு பண்ணுங்களா என்ன?

ந. இது பாருசார்!—அந்த பேச்செ சொல்கூடாது நான் சொல்லலே?

த. இனிமேல் சொல்லலே—அதோ சுப்பிரமணிய ஐயரை அழைத்துக் கொண்டுவருகிறார் பாருங்கள்.—என்ன இளைகிறார் இப்பொழுது!

கிருஷ்ணசாமி ஐயர், சுப்பிரமணிய ஐயரை அழைத்துக்கொண்டு வருகிறார். பிறகு ருபாவதியுடன் கிருஷ்ணசாமி ஐயர் பெண கிருஷ்ணவேணி வருகிறாள். [எல்லோரும் எழுந்திருக்கிறார்கள்.]

ஸ்ரீ மீனாட்சியம்மாளுடன் வருகிறது யார்?

த. அவள் தான் கிருஷ்ணசாமி ஐயர் பெண்.—இனிபேசாமலிரும். [எல்லோரும் உட்காருகிறார்கள்.]

சுப். ஏன், ஆரம்பிக்கலாமே?

கி. இந்தச் சபையின் சார்பாக ம-ள-ள-ஸ்ரீ, திவான் பகதூர் சுப்பிரமணிய ஐயர் அவர்களை நான் இன்று அக்கிராச

னம் வகிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.
[கரகோஷம்.]

சுப் [அக்கிராசனம் வகித்து] மாது சிரோமணிகளே, கனவான்களே, இன்று நடக்க வேண்டிய இச்சபையின் காரியத்தை தெய்வவணக்கத்துடன் ஆரம்பிப்போம்.

கி-வே [எல்லோரும் நிற்கப் பாடுகிறுள்]

ஆதியந்தங் காட்டாத முதலாமெம்மை
யடிமைக்கா வளர்த்தெடுத்த வன்னைபோல
நீதிபெருங் குழுவாகி மனவாக் கெட்டா
நிச்சயமாய்ச் சொந்தமதாய நிமலமாகி
வாதமிடுஞ் சமயநெறிக் கரியதாகி
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்காநின்ற
சோதியை என்னுயிர்த்துணையை நாடிக்கண்ணீர்
சொரியவிரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம்.
(எல்லோரும் உட்காருகின்றனர்)

சுப். மாதுஸ்ரீ சுப்பம்மாள் அவர்கள் இச்சபையின் நான்காவது ஆண்டு அறிக்கைப்பத்திரத்தைப் படிப்பார்கள்.

கி-ஐ. அக்கிராசனுதிபதி அவர்களுக்கு ஒரு விண்ணப்பம்—இந்த அறிக்கை பத்திரமானது அச்சிடப்பட்டு அங்கத்தினருக்கெல்லாம் ஒவ்வொன்று கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், இதைப்படித்ததாக நாம் கொள்ள வேண்டுமென்று பிரேரேபிக்கிறேன்.

தங் அதை நான் ஆமோதிக்கிறேன்.

சுப். இதைப்பற்றி சபையோரின் இஷ்டமெப்படியோ ?

சபையோர். சரி ! சரி !

சுப். இனி—சர் நாராயணசாமி ஐயர், அவர்கள் இவ்வறிக்கை பத்திரத்தை சபையார் அங்கீகரிக்கும்படியாகப் பிரேரேபிப்பார்.

ச-நா. அக்கிராசனுதிபதியவர்களே, சகோதரிகளே, சகோதரர்களே; இந்த சமாஜத்தின் நான்காம் ஆண்டின் அறிக்கைப் பத்திரிகையை நீங்கள் அனைவரும் அங்கீகரிக்கும்படி நான் பிரேரேபிக்கும் விஷயத்தில், இதிலடங்கிய சிலமுக்

கியமான சாராம்சங்களை எடுத்துக்கூற அனுமதி கேட்கிறேன். முதலாவது, இந்த சமாஜமானது ஐந்து வருஷங்களுக்குமுன், இப்பொழுது அக்கிராசனம் வகித்திருக்கும் ம-ா-ா-ஸ்ரீ டிவான் பஹதூர் சுப்பிரமணிய.ஐயர் அவர்களால் இச்சென்னையில் ஏற்படுத்தப்பட்டது முதல், மேன் மேலும் விர்த்தியடைந்து செழித்தோங்கு வதைப்பற்றி எல்லாம் வல்ல கடவுளுக்கு நாம் நமது வந்தனத்தைச் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். இதில் மூன்றுவது பக்கத்தில் குறித்திருக்கிறபடி, இதன் மூலமாக இது வரையில் 169 பெண்கள் காப்பாற்றப் பட்டிருக்கின்றனர், என்கிற விஷயம் நம் எல்லோருக்கும் அதிக சந்தோஷத்தை விளைவிக்க வேண்டிய விஷயமே. இரண்டாவது, நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம், நமது அக்கிராசனதிபதியின் மனைவியாகிய மாது ஸ்ரீ மீனாட்சி அம்மாள் அவர்கள், இந்த சமாஜத்திற்காக நன்கொடையாக நான்காம் பக்கத்தில் கண்டிருக்கிறபடி, லட்சத்து ஐம்பதினாயிரத்து அறநூற்று முப்பது ரூபாய், ஆறு அரை அணு, கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி, நாம் அவர்களுக்கு நம்முடைய அளவில்லா வந்தனத்தை அளிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.[எல்லோரும் கரகோஷம் செய்கின்றனர்] இவைகள் எல்லாவற்றையும் பார்க்கினும் என் சிற்றறிவிற்கு அதிக திர்ப்தியைக் கொடுப்பதென்ன வென்றால், பத்திரிகையில் ஐந்தாம் பக்கம் குறித்திருக்கிறபடி இந்தச் சமாஜத்தாரால் காப்பாற்றப்பட்ட பெண்களுள் பெரும்பாலர், யோக்கிய புருஷர்களால் வரிக்கப்பட்டு, விவாகமாகி, அவர்களுக்குப் பத்தினிகளாக இல்லறம் நடத்துவதே! இது ஒன்றே இந்த சமாஜத்திற்கு என்றும் அழியாப்புகழைக்கொண்டு வருவதாகும்! [கரகோஷம்] இன்னும் இந்த சமாஜத்தினால் நம்முடைய தேசத்திற்கு நேரும் நன்மைகளைப்பற்றிப்பேச அவாவுடையவனாயினும் அக்கிராசனதிபதியவர்கள் இன்றுவேறொரு இடத்திற்குப் போக வேண்டியிருக்கிறபடியால், நான் சொல்லவேண்டி

யதை இதனுடன் முடித்து, இந்த அறிக்கைப்பத்திரிகையை சபையின் அங்கத்தினரெல்லாம் அங்கீகரிக்கும்படிப்பிரேரேபிக்கிறேன். [கரகோஷம்]

கி-ஐ. சர் நாராயணசாமி ஐயர் அவர்கள் எடுத்துக்கூறிய விஷயத்தைப் பற்றி நான் ஆமோதிக்கிறேன்.

சுப் மாது சிரோமணிகளே, கனவான்களே, இந்தச் சமாஜத்தின் நான்காம் ஆண்டு அறிக்கை பத்திரமானது சபையோரால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று பிரேரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டது. சபையாரின் இஷ்டம் எப்படியோ இதைப்பற்றி ?

அனைவரும். சரி ! சரி ! [கரகோஷம் செய்கின்றனர்.]

சுப் உங்கள் கரகோஷத்தினால் நீங்கள் அனைவரும் இதை அங்கீகரித்தீர்கள் என்று தீர்மானிக்கிறேன்—மாது சிரோமணிகளே, கனவான்களே, இனி இச்சபைகலையு முன் அக்கிராசனாதிபதியின் முடிவுரையாகச் சில வார்த்தைகள் சொல்ல உங்கள் அனுமதியைக் கேட்டுக்கொள்கிறேன். முதலில் இன்றைத்தினம் நான் அக்கிராசனம்வஹிக்க வேண்டும் என்று என்னைக் கௌரவப்படுத்திய இந்த சமாஜத்தின் அங்கத்தினருக்கு என் வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாவது இந்த அறிக்கைப் பத்திரிகையில் என்னைப்பற்றி ஏதோபுகழ்ந்து பேசியிருப்பதையெல்லாம் நீங்கள் உண்மையென ஒப்புக்கொள்ளக்கூடாது என்று எண்ணுகிறேன் ! [இல்லை இல்லை! என்கிற கோஷம்] ஆயின் உங்களுடைய பிரியம். என்னைக்கேட்டால் என்னை சன்மார்க்கத்தில் திருப்பி இந்த சமாஜத்தை உண்டுபண்ணுவதற்கு ஆதிகாரணமாயிருந்தவளும், இவ்வருஷம் தனக்குச் சொந்தமாயிருந்ததன் முழு ஆஸ்தியை இதற்கு நன்கொடையாகக் கொடுத்தவளுமாகிய மீனாட்சிக்குத்தான் நீங்கள் வந்தனம் செலுத்தவேண்டுமென்று சொல்லுவேன்! [கரகோஷம்] இங்கு வந்திருக்கும் என்னுடைய சகோதரர்களுக்கு ஒரு வார்த்தை—எந்த தேசத்தில் ஸ்தி

ரீகளின் கற்பானது ஆடவர்களால் காப்பாற்றப் பட்டுவருகிறதோ அத்தேசமே செழித்தோங்கும் என்று நமது பூர்வீகர் கூறியிருக்கும் வார்த்தையை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன். ஆடவர்களாகிய நம்முடைய கடமை என்னவென்றால், நம்முடைய தாரம் தவிர, மற்றமாதர்களை நோக்குமிடத்து, நமக்குப் பெரியவர்களை நமது தாய்மார்களாகவும், நமக்குச் சமானவயதுடையவர்களை, நமக்குத் தங்கையர்களாகவும் நமக்குச்-சிறியவர்களை நமது பெண்களாகவும் பாவிக்கவேண்டும் என்பதே! இச்சபைகலையுமுன் என் கடைசிவார்த்தையாக—இந்த சமாஜத்தைப் போல் பலசமாஜங்கள் நம்முடைய தேசத்தில் முக்கியமான பட்டணங்களி லெல்லாம் மீனாட்சி சுந்தரேசர் அருளால் ஸ்தாபிக்கப்பட்டு—நம்முடைய தேசத்து ஸ்திரீகளின் கற்பானது காப்பாற்றப்படுமாக!—என்று கூறி முடிக்கிறேன். [கரகோஷம். சர் நாராயணசாமி ஐயர் சுப்பிரமணிய ஐயருக்கு ஒரு ரோஜா மாலையைப் போடுகிறார்; கிருஷ்ணவேணி, மீனாட்சிக்கு ஒரு ரோஜா மாலையைப் போடுகிறாள். சபையோர் கரகோஷம் செய்கின்றனர்.]

சபையோருக்கு ஒரு விண்ணப்பம், நான் அவசரமாகப் போகவேண்டியிருந்த போதிலும் நீங்களெல்லாம் இன்னும் கொஞ்சம் இருந்து கொஞ்சம் சிற்றுண்டியைப்புசித்துவிட்டுப் போவீர்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ. அப்பா! அதெமறந்து போகக்கூடாது இன்னும்மீனாட்சி-சுந்தரேசனை நான்பிரார்த்தனை பண்ணிகினு இருந்தேன்!

த அதற்காகவாவது அவரை நினைச்சிகினு இருந்தைங்களே! [எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.